விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka


வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 27 ஞாயிற்றுக்கிழமை (13.10.2002) தொலைபேசி~ 2223378 ஒலி 298




நேற்றைய ஹர்த்தால் காரணமாக யாழ். நகர் வெறிச்சோடிக் கிடக்கும் காட்சி





## காஞ்சிரம்குடாப் படுகொலையைக் கண்டித்து

# வடக்குக் கிழக்கு எங்கும் நேற்று வரலாறு காணாத பூரண ஹர்த்தால்

## இயல்பு நிலை முற்றாக ஸ்தம்பிதம்

(நமது நிருபர்)

**அம்பாறை திருக்கோவில் காஞ்சிரமகுடாப் பகுதியில் விசேட அதிரடிப் படையினர் அப்பாவிப் பொதுமக்கள் ஏழுபேரை கொடூரமாகச் சுட்டுக் கொன்றதைக் கண்டித்து வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகப் பகுதியில் நேற்று பொது அமைப்புக்களினால் அனுஷ்டிக்கப்பட்ட துக்க தினம், பூரண ஹர்த்தாலினால் வடக்குக்கிழக்கு முற்றாக ஸ்தம்பித்தது.**

**இக் ஹர்தால், துக்க தினஅனுஷ்டிப்பில் வடக்குக் கிழக்கைச் சேர்ந்த பல லட்சக்கணக்கான மக்கள் தமது ஆதரவை வழங்கி அரசிற்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.**

திருக்கோவில் காஞ்சிரம்குடாப் பகுதியில் கடந்த புதன்கிழமை அதிரடிப்படையினரின் அடாவடித்தனமான செயல்களைக் கண்டித்து அப்பகுதி மக்கள் அமைதியான ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்திய போது அதிரடிப் படையினர் கண்மூடித்தனமாக சுட்டதில் 7அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த மிருகத்தனமான செயலைக் கண்டித்து வடக்குக்கிழக்குத் தமிழர் தாயகப் பகுதியில் சுமார் பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட மூவின மக்களாலும் துக்க தினமும், ஹர்தாலும் அனுஷ்டிக்கப்பட்டது.

இக்ஹர்தாலின் போது யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் முற்றாகச் செயலிழந்து காணப்பட்டது.

(02ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் இறந்தவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மறியல் போராட்டத்தின் போது பொலிசாரின் கிரனைட் தாக்கு, மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் உயிரிழந்தவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறவுள்ளது.

இறுதிக்கிரியைகளின் பொருட்டு உயிழந்தவர்களின் சடலங்கள் திருகோணமலை நகரின் ஊடாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படவுள்ளது.

இறுதிக்கிரியைகள் இடம்பெறும் வேளையில் பேரினவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சம் கலந்த பீதி திருகோணமலைப் பகுதிகளில் நிலவிவருவதாக அங்கிருந்து

(10ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழகத்தின் 22வது பட்டமளிப்பு விழா இன்று

## அம்பாறை- திருமலை படுகொலைகள்

கொன்றதைக் கண்டித்து வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகப் பகுதியில் நேற்று பொது அமைப்புக்களினால் அனுஷ்டிக்கப்பட்ட துக்க தினம், பூரண ஹர்த்தாலினால் வடக்குக்கிழக்கு முற்றாக ஸ்தம்பித்தது.

**இக் ஹர்தால், துக்க தினஅனுஷ்டிப்பில் வடக்குக் கிழக்கைச் சேர்ந்த பல லட்சக்கணக்கான மக்கள் தமது ஆதரவை வழங்கி அரசிற்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.**

திருக்கோவில் காஞ்சிரம்குடாப் பகுதியில் கடந்த புதன்கிழமை அதிரடிப்படையினரின் அடாவடித்தனமான செயல்களைக் கண்டித்து அப்பகுதி மக்கள் அமைதியான ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்திய போது அதிரடிப் படையினர் கண்மூடித்தனமாக சுட்டதில் 7அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த மிருகத்தனமான செயலைக் கண்டித்து வடக்குக்கிழக்குத் தமிழர் தாயகப் பகுதியில் சுமார் பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட மூவின மக்களாலும் துக்க தினமும், ஹர்தாலும் அனுஷ்டிக்கப்பட்டது.

இக்ஹர்தாலின் போது யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் முற்றாகச் செயலிழந்து காணப்பட்டது.

(02ம் பக்கம் பார்க்க)

திருகோணமலையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மறியல் போராட்டத்தின் போது பொலிசாரின் கிரனைட் தாக்கு, மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் உயிரிழந்தவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறவுள்ளது.

இறுதிக்கிரியைகளின் பொருட்டு உயிழந்தவர்களின் சடலங்கள் திரு... வலமாக எடுத்துச் செல்லப்படவுள்ளது.

இறுதிக்கிரியைகள் இடம்பெறும் வேளையில் பேரினவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சம் கலந்த பீதி திருகோணமலைப் பகுதிகளில் நிலவிவருவதாக அங்கிருந்து

(10ம் பக்கம் பார்க்க)

## அம்பாறை- திருமலை படுகொலைகள்

# புலிகள் திருமலைப் பொறுப்பாளர் திலக் முப்படைத் தளபதிகளுடன் சந்திப்பு

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலையில் ஊர்காவற் படையினரால் மூன்று அப்பாவித் தமிழர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்காக முப்படைத்தளபதிகள், பொலிஸ்மா அதிபர் அடங்கிய உயர்மட்ட மாநாடு ஒன்று நேற்று மாலை திருகோணமலை கடற்படைத்தளத்தில் நடைபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலையில் இடம் பெற்ற மறியல் போராட்டத்தின் போது பொலிசாரும் ஊர்காவற்படையினரும் இணைந்து மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூடு கிரனைட் வீச்சு தொடர்பாக இந்த உயர்மட்ட மகாநாட்டில் ஆராயப்பட்டது.

இம் மகாநாட்டில் இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் பல்லேகல, கடற்படைத்தளபதி ரியல் அட்மிரல் தயாசந்தகிரி, விமானப் படைத்தளபதி ஒஸா மார்ஷல்

(02ம் பக்கம் பார்க்க)

### நோர்வே ஊடாக

# ஆலோசகர் பாலசிங்கத்துடன் அமைச்சர் மிலிந்த தொடர்பு

(கொழும்பு)

அம்பாறை, திருகோணமலை ஆகிய பகுதிகளில் சில தினங்களுக்கு முன்னர் அடுத்தடுத்து இடம் பெற்ற பொதுமக்களின் கொலைச்சம்பவங்கள் குறித்து அமைச்சர் மிலிந்த மொறகொட நோர்வே அரசு மூலமாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் அலோசகர் அன்ரன்பாலசிங்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளார்.

அம்பாறையிலும் திருகோணமலையிலும் 10 அப்பாவிப் பொதுமக்கள் அரச படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டமையால் எழுந்துள்ள பதற்ற சூழ்நிலையைத் தணிப்பதற்கு உதவுமாறு கோரியே அமைச்சர் மிலிந்தமொறகொட அன்ரன் பாலசிங்கத்துடன் நோர்வே அரசுமூலமாக தொடர்பு கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(ம)


வாசகர்களே:-

நாளை திங்கட்கிழமை

வலம்புரியின்

வாரமலர்

சங்கு நாதம்

தவறாது வாங்கிப் படியுங்கள


# யாழ். பல்கலைக்கழகத்தின் 22வது பட்டமளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 22வது பொதுப்பட்மளிப்பு விழா இன்று கைலாசபதி கலையரங்கில் எளிமையான முறையில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் 1332 பட்டதாரிகள் பட்டம் பெறுவர்.

ஐந்து அமர்வுகளாக நடைபெறும் இவ்விழாவில் முதல் அமர்வில் 211பேரும், இரண்டாவது அமர்வில் 203பேரும், மூன்றாவது அமர்வில் 190பேரும், நான்காவது அமர்வில் 183பேரும், ஐந்தாவது அமர்வில் 171பேரும் பட்டங்கள் பெறுவர்.

(10ம் பக்க்ம் பார்க்க)

### புலிகளின் பிரமுகர்கள் பாப்பா, சேரலாதன், செம்மணன்

# நயினாதீவில் இருந்து குறிகட்டுவான் வர கடற்படையினர் அனுமதி மறுப்பு

(நயினாதீவு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரமுகர்களான பாப்பா, செம்மணன் மற்றும் சேரலாதன் ஆகியோர் நேற்று நயினாதீவில் இருந்து குறிகட்டுவானுக்கு வர முயற்சித்த போதும் கடற்படையினர் அனுமதி மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவதால் நயினாதீவில் இருந்து குறிக்கட்டுவானுக்குச் செல்ல முடியாதென்று கடற்படையினர் பயண அனுமதி மறுத்ததாகத் தெரியவருகிறது.

இந்நடவடிக்க்கை குறித்து விடுதலைப்புலிகள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு முறைப்பாடு செய்துள்ளனர். (இ)

# நெடுந்தீவில் சடலம் கரை ஒதுங்கியுள்ளது

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு மடத்தடி கரையோரப்பகுதியில் நேற்றுக் காலை இளைஞர் ஒரவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

அரைக்காறசட்டையுடன் கரையொதுங்கிய சடலத்துடன் பாக் ஒன்றும்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கிழக்கில் இடம்பெற்ற வன்முறைகள் சமாதானத்தைப் பாதிக்காது

## பிரதமரின் செயலர் பிரட்மன் நம்பிக்கை

(கொழும்பு)

கிழக்கில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெறும் சமாதான முயற்சிகள் பாதிப்படையாதென்று பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சமாதானமுயற்சிகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தும்வகையில் சில சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றபோதும் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் புத்திசாதுரியமாகசெயற்பட்டு வருகின்றனர்.

சமாதான முயற்சிகளுக்கு எதிராக சமாதானமுயற்சிகளைக் குழப்பும் வகையில் தீயசக்திகள் செயற்படலாம் என அரசாங்கம் ஏற்கனவேஎதிர்பார்த்திருந்தது இதனால் சமாதான முயற்சிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும். சதிநடவடிக்கைகளுக்கு முகம்கொடுத்து சமாதானமுன்னெடுப்புக்களை அரசாங்கம் தொடர்ந்தும் மேற்கொண்டுவருகிறது

சமாதான காலத்தில் இடம்பெறும் இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் உண்மையில் சமாதான முயற்சிகளுக்கு எதிராகமேற்கொள்ளப்பட்டதா என்பதுகுறித்தும் ஆராயப்படுகிறது.

சமாதானமுயற்சிகளைக்குழப்புவதற்காகவே வன்முறைச் சம்பவங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டதாயின் சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுப்பற்கு அரசாங்கம் தயாராகிவருகிறது: என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (த)

## வடக்கு - கிழக்கு...

### ஹர்த்தாலினால் யாழ்குடாநாடு ஸ்தம்பிதம்

யாழ் குடாநாட்டில் நேற்று இடம்பெற்ற ஹர்த்தாலினால் யாழ்குடாநாடு பூரண ஸ்தம்பித நிலை அடைந்தது. அத்தியஅவசிய சேவைகள் தவிர்ந்த மற்ற சேவைகள் எதுவும் நடைபெறவில்லை.

வர்த்தகநிலையங்கள் யாவும் பூட்டப்பட்டு கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தது. சோக கீதங்கள் இசைக்கப்பட்டன.

### சந்திகளில் ரயர் எரிப்பு

காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி, மானிப்பாய் வீதி ஆகிய வீதிகளில் உள்ள முக்கிய சந்திகளில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டன. உரும்பிராய் சந்தியில் நேற்றுக்காலை 6மணிக்குபோடப்பட்ட வீதித்தடை பிற்பகல் 6 மணிக்கு அகற்றப்பட்டது. இந்த வீதித்தடைப் பகுதியில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் நின்று தமது கண்காணிப்புப்பணியினை மேற்கொண்டனர்.

குடாநாட்டிலுள்ள முக்கிய சந்திகளான பருத்தித்துறை, மானிப்பாய், சங்கானை, சுன்னாகம், மருதனார்மடம், திருநெல்வேலி, கொடிகாமம், சாவகச்சேரி, நெல்லியடி, அச்சுவேலி சந்தைகள் யாவும் இயங்கவில்லை. சந்தைப்பகுதிகள் வீதிகள்யாவும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

### திருமலை, அம்பாறையில் சோகமேஉருவானஹர்த்தால்

திருகோணமலை அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலை அடுத்து அவ்விரு மாவட்டங்களும் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தது. வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு அங்கு கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.. அரச, தனியார் போக்குவரத்துகள் எதுவும் சேவையில் ஈடுபடவில்லை. இதனால் மக்கள் நடமாட்டம் இன்றி யாவும் வெறிச்சோடிக் காணப்பட்டன இராணுவ வாகனங்கள் சில ரோந்துச்சேவையில் ஈடுபட்டன.

### மக்கள் நடமாட்டமின்றி வன்னி வெறிச்சோடியது

வன்னி பெருநிலப்பரப்பில் சகல வர்த்தகநிலையங்கள், மற்றும் பொது நிறுவனங்களும் பூட்டப்பட்டு கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன, முக்கிய சந்திகள் தேறும் சோக கீதங்கள் இசைக்கவிடப்பட்டிருந்தன.

கிளிநொச்சியில் மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் மௌனப்பேரணி ஒன்றை அமைதியான முறையில் நடத்தியிருந்தது கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலில் இருந்து ஆரம்பமான இந்த மௌன ஊர்வலத்தில் மக்கள் கறுப்புப் பட்டியணிந்து சென்றனர். இந்த ஊர்வலத்தில் சென்றவர்கள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்திற்குச்சென்று அங்கு நோர்வேக்கும் கண்காணிப்புக் குழுவிற்கும் மகஜர் ஒன்றைக்கையளித்தனர். இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி அரச அரச அதிபரிடமும் மக்கள் மகஜர் கையளித்தனர்.

### மன்னார், முல்லைத்தீவிலும் ஹர்த்தால்

மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இக் ஹர்த்தாலின் போது இவ்விரு மாவட்டங்களிலும் சகலவிதமான போக்குவரத்துகளும் இடம்பெறவில்லை. கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டு சோக கீதம் இசைக்கப்பட்டது.

வெகுஜன அமைப்புகளினால் ஒழுங்குசெய்யப்பட்ட இக்ஹர்த்தாலை அடுத்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அரச அதிபர் ஆகியோரிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

### வவுனியாவிலும் பூரண ஹர்த்தால்

அம்பாறை கஞ்சிரங்குடாவில் அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டினால் கொல்லப்பட்ட ஏழு அப்பாவிப் பொதுமக்களின் கொலைகளைக் கண்டித்து வவுனியாவில் என்றுமில்லாதவாறு நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியாவில உள்ள வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டு கறுப்பு கொடிகள் எங்கும் பறக்கவிடப்பட்டிருந்தது போக்குவரத்துகள் எதுவும் இடம்பெறவில்லை. வீதிகள் யாவும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

வவுனியா வீதிகளில் இராணுவ வாகனங்களைத் தவிர வேறுவாகனங்கள் எதுவும் நடமாடவில்லை. ஆனால் கொழும்பில் இருந்து வந்த பயணிகளின் வாகனங்கள் மாத்திரம் ஆங்காங்கே நடமாடின.

ஓமந்தை சோதனைச்சாவடி திறந்திருந்தபோதும் போக்குவரத்து மிகவும் குறைவாகவே இடம்பெற்றது. (ம)

### 9 மாத காலத்தில்

பாதிக்கப்பட்டோரில் 46 ஆண்களும் 6 பெண்களும் அடங்குவர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் 12 மிதிவெடிச் சம்பவங்களும், வலிகாமத்தில் 24 சம்பவங்களும், அரியாலையில் 8 சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இருப்பினும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் இடத்து இவ்வாண்டு இடம்பெற்றுள்ள சம்பவங்கள் குறைவானது என அப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (உ-8)

## நீதி அமைச்சு அங்கீகாரம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கானான் சிறுவர் பராமரிப்பு இல்லத்தினை அங்கீகரிக்கப்பட்ட இல்லமாக நீதி அமைச்சு பிரகடனப் படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணக்குடாநாட்டில் உள்ள நீதிவான் நீதிமன்றங்களால் விளக்கமறியலில் வைக்கப்பட வேண்டிய 14 மற்றும் பெண்கள் கானான் இல்லத்தில் வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சேர்க்கப்பட்டு பராமரிக்கப் படுகிறார்கள் இப்பராமரிப்பு நிலையத்தை சட்டபூர்வமாக்கும் வகையில் நீதி அமைச்சினால் சிபார்சு செய்யப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டுள்ளது. (7)

## வர்த்தக நிலையங்களை இன்று திறக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்து நேற்று குடாநாடு தழுவிய வகையில் இடம்பெற்ற ஹர்த்தால் மற்றும் துக்கம் அனுஷ்டிப்பு போராட்டத்துக்கு ஆதரவுவழங்கிய அனைவருக்கும். யாழ் மாவட்ட பொதுஅமைப்புகளின் ஒன்றியம் நன்றி தெரிவித்துள்வது.

தமிழ் மக்களின் உணர்வையும் உள்ளக் குமுறலையும் வெளிப்படுத்தும் வகையில் இடம்பெற்ற போராட்டத்துக்கு ஆதரவு வழங்கிய பொதுஅமைப்புகள், அரசு சார்பற்ற அமைப்புக்கள், போக்குவரத்துத்துறை, கூட்டுறவுத்துறை மற்றும் பொது நிறுவனங்கள் அனைத்துக்கும் யாழ் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் நன்றி தெரிவித்துள்ளது.

இதே வேளை இன்று வழமைபோல் வர்த்தக நிலையங்கள், தொழில் நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் அனைத்தையும் திறந்து வழமையான பணிகளை மேற்கொள்ளுமாறு பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சொலமன் சிறில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்றையநாளை விடுமுறை தினமாகக் கொள்ளாமல், மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென்றும் ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7

## மோட்டார் சைக்கிள் விபத்து இளைஞன் கோரப்பலி

(நீராவியடி)

யாழ்ப்பாணம் பழைய தபால்கந்தோர் வீதிச் சந்தியில் மோட்டார் சைக்கிள் ஒன்று மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்

நேற்று மாலை 4.00 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அல்லைப்பிட்டி இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜெகதணபாலன் பிரதீபன் (வயது 20) என்ற இளைஞனே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (த-265)

## எயிட்ஸ், மலேரியா ஒழிப்புக்கு இன்னும் சில தினங்களில் இலங்கைக்கு நிதி உதவி

(கொழும்பு)

எயிட்ஸ் மலேரியா, கசரோகம் ஆகிய வற்றை இல்லாது ஒழிக்கும் சர்வதேச நிதியத்திடம்இருந்து இன்னும் சில தினங்களில் இலங்கைக்கு நிதி உதவிகிடைக்கவுள்ளது.

இதேவேளை, இந்த நோய் உலக நாடுகளில் இருந்து இல்லாது ஒழிக்கும் பொருட்டு அடுத்த வருடம் வழங்கவுள்ள உதவிகளை நூறு கோடி அமெரிக்க டொலர்களில் இருந்து 200 கோடி அமெரிக்க டொலர்களாக உயர்த்துமாறுஇவ் எயிட்ஸ்,மலேரியா, கசரோகம் ஆகியவற்றை இல்லாது ஒழிக்க சர்வதேச நிலையம் உதவி வழங்கும் நாடுகளிடம்கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த நோய்களினால் வருடாந்தம் 60 லட்சம் பேர் உயிர் இழப்பதாக இச் சர்வதேச நிலையம் தெரிவித்துள்ளது. (உ-7)

புலிகள்...

பெரேரா பொலிஸ்மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

### முப்படைத்தளபதிகளுடன் திலக் சந்திப்பு

இம்மாநாட்டினை அடுத்து யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுத்தலைவர் தலைமையில் மாநாடு ஒன்று நடைபெற்றது. இம்மாநாட்டில் பொலிஸ்மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராசா உட்பட முப்படைத்தளபதிகளும் தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திலக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணாமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக்எச்சந்தர்ப்பத்திலும் படையினர் அப்பாவிப்பொது மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யமுடியாது அதனை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கவும் முடியாது என்று வற்புறுத்திக்கூறியுள்ளார்.

இதனை அடுத்து இது போன்ற சம்பவங்கள் வருங்காலத்தில் நடைபெறாதவாறு பார்த்துக்கொள்வதாக முப்படைத் தளபதிகளும் திலக்கிடம் வாக்குறுதி அளித்துள்ளனர். (ம)

## சதுரங்கப் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

நேற்று நடைபெறவிருந்த இலங்கை சதுரங்கச் சம்மேளனத்தின் சதுரங்கப்போட்டிகள் இன்று காலை 9.00 மணிககு யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் ஆரம்பமாகுமென யாழ்ப்பாணம் சதுரங்க சம்மேளனத்தின் செயலாளர் எஸ். வித்தியாதரன் தெரிவித்துள்ளார். (5)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் புலிகளின் பிரமுகருடன் சந்திப்பு

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற படுகொலைச்சம்பவம் தொடர்பாக உண்மைச்சம்பவங்களை நேரில் விசாரித்து அறியும் பொருட்டு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட பியுறு ஹெவ்டே நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்தார்.

திருகோணமலை வந்த யுத்த நிறுத்தக்கண்காணிப்புக்குழுத் தலைவர் தமிழீழவிடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக்கைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச்சந்திப்பின்போது விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக், கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சம்பவமானது பொலிசாரினாலும் அரச படையினராலும் மேற்கொள்ளப்பட்டவை என்றும் இச்சம்பவத்தோடு தொடர்பு உடையவர்களின் பெயர்களையும் தன்னால்கூற முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து யுத்தநிறுத்தகண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர்ஜெனரல்ரொண்ட பியுறு ஹெவ்டே இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாதவாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு பார்த்துக்கொள்ளும் என்றும் திலக்கிடம் உறுதி அளித்துள்ளார். (ம)

# யுத்தம் காரணமாக தென்மராட்சியில்

# 18 ஆயிரத்து 154 வீடுகள் பாதிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சியில் கடந்த காலங்களில்இடம்பெற்றயுத்த அனர்த்தங்கள் காரணமாக மொத்தம் 18 ஆயிரத்து 154 வீடுகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளமை அண்மையில் திரட்டப்பட்ட புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இவற்றுள் நிரந்தர அரை நிரந்தர மற்றும் தற்காலிக வீடுகள் உள்ளடங்கியுள்ளன.

பாதிப்புக்குள்ளாகிய10 ஆயிரத்து 93 நிரந்தர, வீடுகளில் 5 ஆயிரத்து 430 வீடுகள் முழுமையாகவும் 3 ஆயிரத்து 737 வீடுகள் பகுதியாகவும் 926 வீடுகள் ஓரளவு பாதிப்புக்கும் உள்ளாகியுள்ளன.

அரை நிரந்தர வீடுகளில் 3 ஆயிரத்து 546 வீடுகள் முழுமையாகவும் ஆயிரத்து 395 வீடுகள் பகுதியாகவும் 527 வீடுகள் ஓரளவு பாதிப்புக்களையும் கொண்டுள்ளன.

அதேசமயம் தற்காலிக வீடுகளில் 2 ஆயிரத்து 154 வீடுகள் முழுமையாகவும் 375 வீடுகள் பகுதியாகவும் 74 வீடுகள் ஓரளவுபாதிப்புக்கும் உள்ளாகியுள்ளன.

யுத்த நடவடிக்கைகள் காரணமாக பாதிப்புக்குள்ளான வீடுகளைப் புனரமைப்புச் செய்வதற்கு இதுவரை அரசாங்கமோ அல்லது வேறு அமைப்புக்களோ எத்தகைய உதவிகளையும் வழங்க முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தென்மராட்சிப் பகுதியில் அமுல்படுத்தப்படவுள்ளஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடனான 'நெக்கோட்' திட்டத்தின் கீழ், ஆயிரத்து 500 ரூபா வருமானத்துக்குட்பட்ட200 குடும்பங்களுக்கான வீடமைப்புத் திட்டம் ஒன்றினை அமுல் செய்வதற்கான ஏற்பாடுகள்செய்யப்பட்டு வருகின்றதாகவும் அறியப்படுகின்றது.

மொத்தமாகப் பாதிப்புக்குள்ளான 18 ஆயிரத்து 154 வீடுகளைப்புனரமைப்புச்செய்வதற்கு முழுமையான நிதியுதவியோ அல்லது பொருள் உதவியோ நமக்கு வழங்கப்படுமா எனபாதிக்கப்பட்டவர்கள் வினா எழுப்பி வருகின்றமையும்இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

## கடற்றொழில் குழுக்கள் அமைக்கும்கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் அமைப்பு மற்றும் கடற்றொழில் குழுக்களை தேசிய,மாவட்ட, வலய இறங்குதுறை மட்டங்களில் அமைப்பது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் எதிர்வரும் 16ஆம் திகதிபுதன் கிழமை கொழும்பு சுகதாஸ உள்ளரங்கில் இடம்பெறவுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் மஹிந்த விஜேசேகர தலைமையில் இடம்பெறவுள்ள இக்கலந்துரையாடலில் வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் 50 பேர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வடமாகாணத்திற்கான கடற்றொழில் விருத்தி நிதி ஒதுக்கீடு தொடர்பாக இதில் இறுதி முடிவெடுக்கப்படவுள்ளது. (உ-6,77)

## ஜனாதிபதி செயலகத்தில் கண்காணிப்புக் குழு கருமபீடம் அமைப்பு

(கொழும்பு)

அம்பாறையிலும்,திருகோணமலையிலும் இடம் பெற்ற துரதிர்ஷ்டவசமானதுப்பாக்கி சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தீவிர கவனம் செலுத்திவருகிறார்.

இந்தவகையில் இச்சம்பவங்களைக் கண்காணிப்பதற்கு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் கண்காணிப்புக்குழு கருமபீடம் ஒன்றை ஜனாதிபதி ஆரம்பித்துள்ளார்.

இக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் பொதுமக்கள் முறைப்பாடுகளை சமர்ப்பிக்கலாம் என்றும் இச் சம்பவங்கள் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விழிப்புடன் செயற்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## இந்தியப் பிரஜைகள் நாடு கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

விசா அனுமதிக்காலம்முடிவடைந்த நிலையில் தங்கியிருந்த 50 இந்திய பிரஜைகள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

நாட்டின் குடிவரவு,குடியகல்வு சட்டத்திற்கிணங்க இவர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

ஒப்பந்த அடிப்படையில் பொரளை, கிராண்ட்பாஸ் போன்ற இடங்களிலுள்ள கடைகளில் இவர்கள் பணியாற்றி வந்துள்ளனர். (உ-8)

## காயமடைந்தவர்களுக்கு மனமுவந்து இரத்ததானம்

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஹர்த்தாலின் போது காயமடைந்தவர்களுக்கு இரத்தம் வழங்குவதில் பொதுமக்கள் ஆர்வம் காட்டியுள்ளனர்.

ஊரடங்குச்சட்டத்தையும் பொருட்படுத்தாது பொதுமக்கள் தாமாக முன்வந்து இரத்தம் வழங்கியுள்ளதாக திருகோணமலை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திருகோணமலை வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பொறுப்பாளர் டாக்டர் திருமதி ராஜ்குமார் தாமாக முன்வந்து இரத்தம் வழங்கியவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார். (ம)

## நவீல்ட் பாடசாலை மாணவர்களைக் கௌரவிப்பு

(தென்மராட்சி)

வெள்ளைப் பிரம்பு தினமாகிய இம் மாதம் 15 ஆம் திகதி கைதடி நவீல்ட் பாடசாலையில் கல்வி பயில்கின்ற மாணவர்களை சாவகச்சேரி லயன்ஸ்கழகம்தேநீர் விருந்து அளித்து கௌரவிக்கவுள்ளதாக சழகத்தின் செயலாளர் லயன் கே. சற்குணதேவன் தெரிவித்தார்.

சுண்டுக்குளியில் அமைந்துள்ள கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் கழகத்தின் தலைவர் லயன் செ.சுப்பிரமணியம் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (உ-77)

## மறியல் போராட்டம்

(அச்சுவேலி)

தொண்டைமானாறுவெளிக்கள நிலையப்பகுதியில்இருந்து வெளியேறிய குடும்பங்கள் தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி விரைவில் கோப்பாய் பிரதேச செயலகம்முன்பாகமறியல் போராட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருப்பதாக தெரிய வருகிறது. (உ-14)

## கரை திரும்புவதில் கஷ்டங்கள்

(யாழ்ப்பாணம்)

தொழிலுக்குச்செல்லும் வடபகுதி மீனவர்கள் இரவில் கரைதிரும்புவதற்குப் பெருத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடற்கரைகளில் அமைக்கப்பட்டிருந்த வெளிச்சவீடுகள் சேதமடைந்தமையினாலேயே கரைதிரும்புவதில் கஷ்டங்கள் எதிர்நோக்கப்படுகின்றன. (உ-6)

## மரக்கன்றுகள் நாட்டல்

(அச்சுவேலி)

சர்வதேச அஞ்சல்தினத்தை முன்னிட்டு கரவெட்டி தபால் நிலையத்தில் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

கரவெட்டி தபால் நிலைய அதிபர்க.பரராசசிங்கம் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இவ் வைபவத்தில் தேசிய கொடி, தபால் கொடி என்பன ஏற்றப்பட்டதையடுத்து நெல்லி, மலைவேம்பு போன்ற மரக்கன்றுகள் நாட்டப்பட்டன. (உ-14)

## வன்னியில் சூரிய சக்தி கணனிப் பயிற்சி நிலையம் பிரான்ஸில் நிதி சேகரிப்பு

(கிளிநொச்சி)

வன்னியில் சூரியசக்தியில் இயங்கும் கணனிப்பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு பிரான்ஸ் தமிழர் புனர்வாழ்வுக்கழகம், அந்நாட்டில் வதியும் தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பினூடாக திட்டமிட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக பிரான்ஸ் தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு இதற்கான நிதி சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. (உ-3)

# நவராத்திரி பாமாலை

## (ஏழாம் நாள்)



### நல்லோசை தாரும்மா

நாவில் குடியிருக்கும் சரஸ்வதிதாயே
நம் வாழ்வில் என்றும் அருளைப்புரிய
நம்பிக்கையுடன் உன்னை வணங்குகிறேன்
நம் உள்ளமதில் நல் லோசை தாரும்மா

மகேந்திர நிருஷன்
யாழ்: புனிதா ச.கல்லூரி

### கருணை செய்வாய்

வெண் ணிறச் சேலை தாங்கி
விரல் களால் வீணை மீட்டி
கண் ணெனுங் கல்வி நல்கும்
கலை மகளே கருணை செய்வாய்

அர்ச்சனா ஆனந்தராஜா
உரும்பிராய்

### வாணி வரம் வேண்டி...

வீணை கொண்ட வாணி வரம் வேண்டி
பாடிப் பணிகின்றேன் பதாம்புயத்தாயே
ஞான ஒளி ஏற்றிடுவாய் தேவி- நன்றாய்
ஞாலமதில்வாழ்ந்திடவே நல்லருள் தந்திடம்மா

உலகசக்திக் கெல்லாம் உறைவிடமாய் உள்ளவளே
உண்மையும் நேர்மையும் உய்திபெறச் செய்திடம்மா
அபிராமிப்பட்டர் தனக்கருள்புரிந்த அபிராமியே
அன்னையேமகாதேவி அருளிடம்மா அவனிக்கெல்லாம்

மா. தாருகாசினி
யா/ விக்கினேஸ்வரக் கல்லூரி, கரவெட்டி.

### கருணைக்கடலே!

நெஞ்சத்தில் என்றும் உறுதியுடன்- இந்த
பிரபஞ்சத்தில் சிறப்புறவாழ வீரம்தரும்
முருகனின் அன்னையே! மலைமகளே!
கார்த்திகைப் பெண்கள் கையில் தவழ்ந்த
கார்த்திகேய ஈச்வரி -உன் மேல்
காதல் கொள்ளும எனக்காக - வீணா
கானம் பாடும் கலைவாணியே!
கருணைக்கடலே! சரணமம்மா உந்தனுக்கு.

சி. சுயா
யா/ மருதங்கேணி இ. த. க. பாடசாலை,
தாழையடி

### வேண்டி நிற்கின்றேன்

கலைகள் தரும் கலைமகளே
கலையாமல் நாவில் நின்று
கல்வி தனை சீர்பெறவே!
கலைகள் யாவும் கைவரவே!
கற்றல் தனை மறவாமல்
கருணை காட்டி நிற்பாயே
கலைமகளே உன்னை
கரம் ஏந்தி வேண்டி நிற்கின்றேன்.

சி. சுயி
ஸ்ரான்லி கல்லூரி,

### கலைவாணியே!

கலைவாணியே அம்மா கலைவாணியே!
கருணையுள்ளம் கொண்ட கலைவாணியே!
கல்வியின் முதலான கலைவாணியே!
கலைகளின் அதிபதியே கலைவாணியே!

சி. சிவஜன்
J/ M. V. M

## கடத்தப்பட்ட ஜப்பானியர்கள் வடகொரிய புலனாய்வுப் பிரிவினரிடம்

(பியோங்யாங்)

வடகொரியர்களால் கடத்தப்பட்ட தெனக்கருதப்படும் ஜப்பானியர்கள், உயிருடன் இருப்பதாக வட கொரியத தலைவர் ஹிம் ஜோன்கில் அறிவித் துளளார்.

நேற்று ஜப்பானிற்கு விஜயம் செய துள்ள வடகொரியத் தலைவர் ஜப்பா னிய அமைச்சரவைத் தலைவர் ஹிம்மை நேரடியாகச் சந்தித்த போது இத்தக வலை வெளியிட்டுள்ளார்.

கடத்தப்பட்ட11 ஜப்பானியர்களும் வடகொரியப் புலனாய்வுப் பிரிவின ரிற்கு ஜப்பானிய மொழியைக் கற்றுக கொடுப்பதற்காகக் கடத்தப்பட்டனர் என்று ஜப்பானிய அரசு தரப்பு செய்தி கள் தெரிவித்தன.

ஜப்பானிற்கும், வடகொரியாவிற் குமிடையிலான உறவை மேம்படுத்த இருநாட்டுத் தலைவர்களும் இணங் கியுள்ளதாக தெரியவந்துள்ளது. (சு-02)

## பின்லாந்தில் குண்டுத்தாக்குதல் 6பேர் பலி; 60 இற்கும் அதிகமானோர்காயம்

(ஹெல்சின்சி)

பின்லாந்தில் நடைபெற்ற குண் டுத்தாக்குதலில் 6பேர் கொல்லப் பட்டதுடன், 60 இற்கும் மேற்பட்ட வர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

பெல்ஜிங் நகரிலுள்ள முக்கிய வர்த்தக கட்டடத்தின் முதலாவது மாடியிலேயே நேற்று முன்தின மிரவு இக் குண்டு வெடிப்பு இடம் பெற்றுள்ளது.

மிகவும் பரபரப்பாக இயங்கும் பெல்ஜிங் நகரில் மேற்படி குண்டு வெடிப்பு தொடர்பான வேறு எந்த தகவலையும் உடனடியாகக் கூற முடியாது என அந்நாட்டுப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர். (சு-04)

## செப்டம்பர் தாக்குதலின் சூத்திரதாரி அமெரிக்கப்படையின் கட்டுப்பாட்டில்

(இஸ்லாமபாத்)

செப்டம்பர் தாக்குதல் தொடர் பாக அண்மையில் பாகிஸ்தானில் கைதுசெய்யப்பட்ட அல்கெய்டா அமைப்பைச் சேர்ந்த றம்ஸீல் பினால்சி தற்போது அமெரிக்கப்படையின் கட்டுப் பாட்டில் இருப்பதாகப் பாகிஸ்தானிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் இடம் பெற்ற அமெரிக்க மீதான பயங் கரவாதத தாக்குதலைத திட்டமிட்ட தில் றம்ஸீல் பினால்சி முக்கிய பங்கு வகித்தார் என அமெரிக்க அரசு தெரி வித்துள்ளது.

கைது செய்யப்பட்ட றம்ஸீல் பினால்சி அமெரிக்க கடற்படை கப் பலிற்கு அல்லது ஓமானிற்கு கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் எனப்பாகிஸ தானிய அரசு வட்டாரங்கள் தெரிவித துள்ளன.

இதேவேளை இக் கைது குறித்து திருப்தி வெளியிட்டிருக்கும் அமெ ரிக்கா, பயங்கரவாதத்திற்கு எதிரான தாக்குதலில் தமக்கு ஒத்துழைப்பு அளித்த பாகிஸ்தான் அரசிற்கு நன்றி தெரிவித்துள்ளது. (சு-02)

## ஐவரிக்கோஸ்டில் மீண்டும் சமரச முயற்சி ஆரம்பம்

### மேற்கு ஆபிரிக்கா தலையீடு

(லண்டன்)

ஐவரிக்கோஸ்டில் அரசாங்கத்திற் கும் தீவிரவாதிகளுக்குமிடையில் சமரசத்தைஏற்படுத் முயற்சி களை மேற்கு ஆபிரிக்கா மீணடும் ஆரம்பித்துள்ளது.

இதனையடுத்து செனகல் பொது விவகார அமைச்சர் நேற்றுத் தீவிரவா திகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஐவ ரிக்கோஸ்ட்டின் வோய்கே பகு திக்கு சென்றுள்ளார்.

அத்துடன் ஏனைய சமாதான இணைப்பாளர்கள் ஐவரிக்கோஸ்ட் அபுஷா நகரிற்கு சென்றுள்ளனர் எனச்செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த செப்ரம்பர்11 ஆம் திகதிக்கு பின்னர் ஐவரிக்கோஸ்டில் இடம் பெற்ற மோதல்களில் நூற்றுக்கணக் கானோர் உயிரிழந்துள்ளமை தெரிந்ததே. (சு-04)

## கியூபா ஏவுகணை விவகாரம் தொடர்பாக அமெ. ரஷ்ய அதிகாரிகள் ஆலோசனை

(வாஷிங்டன்)

முன்னாள் அமெரிக்க மற்றும் ரஷ்ய அதிகாரிகளும் இராணுவ அதிகாரிகளும் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

1962 ஆம் ஆண்டு ஏற்பட்ட கியூபா ஏவுகணை விவகாரம் தொடர்பாக ஆராயும் பொருட்டே மேற்படி சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

கியூபா ஏவுகணை விவகாரத்தை அமெரிக்காவும்,கியூபாவும் மிகுந்த அவதானத்துடன் கையாண்டதன் மூலம் அணுவாயுத போர் ஒன்று தவிர்க கப்பட்டதாக முன்னாள் அமெரிக்க பாது காப்பு இராஜாங்க செயலாளர் றொப மக்னமாறா தெரிவித்துள்ளார்.

அத்துடன் இது தொடர்பாக கியூபா ஜனாதிபதி பிடல் கஸ்ரோ ஏவுகணை பயன்படுத்தக் கையாண்ட முறையை யும் அவர் பாராட்டியுள்ளார்.

இதேவேளை ஈராக் விவகாரம் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்டபிள்யூ புஷ்சின் அணுகு முறைகளை முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க செயலாளர் கண்டித் துள்ளாா என்பது குறிப்பிடத்தக்கது. (சு-04)

### இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றார்

(புடாபெஸ்ற்)

நேற்று முன்தினம் இலக்கியத் திற்கான நோபல் பரிசு ஹங்கே ரியை சேர்ந்த இம்ரகிற்ரஸ்ற்ருக்கு கிடைத்துள்ளது.

காட்டுமிராண்டித்தனமான வரலாற்று சூழ்நிலையில் தனி மனிதனின் வாழ்வு மற்றும் அவனது சிந்தனையின் மேன்மை குறித்து தனது நூல்களில எழுதியமைக்காக 2002 ஆம் ஆண்டுடிற கான இந் நோபல் பரிசு வழங்கப்பட் டுள்ளது. (சு)

### இந்தோனேசியாவில் பூமியதிர்ச்சி; ஒருவர் பலி

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் கிழக்குப் பகுதி மாகாணமான பாபுவாவில் நேற்று காலை இடம் பெற்ற 6.4 அளவான பூமி அதிர்ச்சியில் ஒரு வர் கொல்லப்பட்டதுடன்பலர் காய முற்றனர்.

இதேவேளை 7.6 ரிச்சட் அள வான பூமி அதிர்ச்சி ஒன்று அயல் நாடான பப்புவாக்கினியில் கடந்த மாதம் ஏற்பட்டதில் மூவர் கொல்லப் பட்டமை தெரிந்ததே. (சு-02)

## ஈராக்கின் ஏவுகணைத்தளம் மீது அமெரிக்க, பிரிட்டன் விமானங்கள் தாக்கு

(வாஷிங்டன்)

ஈராக்கின் ஏவுகணைத்தளம் ஒன் றின் மீது அமெரிக்க, பிரிட்டன் விமானங் கள் தாக்குதல் நடத்தியுள்ளன.

ஐக்கிய நாடுகளின் ஆயுதப் பரிசோத கர்களை ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் அனுமதித்ததன் பின்னர் அமெ ரிக்க பிரிட்டன் விமானங்கள் மீது ஈராக விமானங்கள் 122 தடவைகள் தாக் குதல் மேற்கொண்டதாக அமெரிக்கா கூறுகின்றது.

இதனைக் கருத்திற் கொண்டே இம முறை நடத்திய தாக்குதலின் போது புதிய உத்திகளைக் கையாண்டு அமெரிக்க விமானங்கள் ஈராக் ஏவுக ணைத் தளம் மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியதாக பென்ரகன் நிறுவனம்கூறுகின்றது. (சு-04)

## நேபாளத்தின் புதிய பிரதமராக வலது சாரிக்கட்சித் தலைவர் நியமனம்

(காட்மண்டு)

நேபாள மன்னர் ஞானேந்திரா அந நாட்டின் புதிய பிரதமராக வலது சாரிக் கட்சியின் தலைவரான லோகேந்திர பகதூர்ஷன் என்பவரை நியமித்துள் ளார்.

ஒன்பது அமைச்சர்களைக் கொண்ட இடைக்கால நிர்வாகத்திற்கு புதிய பிர தமர் தலைமை வகிப்பார் எனவும் மன னர் தெரிவித்துள்ளார்.

இவர் நேபாளத்தில் ஒத்திவைக் கப்பட்ட தேர்தலை வெகு விரைவில நடத்த திட்டமிட்டுள்ளதாகவும், மாவோய் கிளர்ச்சியாளர்களுடன் பேச்சு நடத்தி நாட்டிற்கு அமைதியையும் சமாதானத தையும் கொண்டு வருவது தான் தனது முக்கிய நோக்கமும் பணியும் என புதிய பிரதமர் தெரிவித்துள்ளார்.

எனினும் நேபாளத்தில் கடைப் பிடிக்கப்பட்டு வரும் அரசியல் சாசனத் திற்குட்பட்ட முடியாட்சியை நீக்க வேண் டும என்று மாவோய் இயக்கத்தினர் வன்முறைகளில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (சு-04)

## நேபாளத்தில் குண்டு வெடிப்பு ஒருவர் பலி, 8 பேர் காயம்

(காட்மண்டு)

நேபாளத்தின் காட்மண்டுப் பகுதி யில் மாவோ கெரில்லா சந்தேக நபர் களால் நடத்தப்பட்ட குண்டு வெடிப்பு சம்பவம் ஒன்றில் ஒருவர் கொல்லப் பட்டதுடன் 8பேர் காயமடைந்துள் ளனர்.

காட்மண்டு நகர் வீதியொன்றில் நேற்று அதிகாலை 5.00 மணிக்கு இக் குண்டு வெடிப்பு சம்பவம் இடம் பெற் றது.

ஆட்சிப் பொறுப்பைஏற்றிருந்த மன் னா கஜேந்திரா இடைக்கால அரசாங் கம் ஒன்றிடம இப் பொறுப்பை கைய ளித்த மறுநாள் இச் சம்பவம் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (சு-02)

## யாழ். பல்கலைக்கழகத்தில் கௌரவ பட்டம் பெறுகின்ற கல்வியாளர்

### வாழ்நாட் பேராசிரியர் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை கணேசலிங்கம்

யாழ்.பல்கலைக்கழக முன்னோடிகளில் ஒருவரும் தலைசிறந்த விலங்கியலாளரும் ஆற்றல் மிக்க ஆய்வாளரும் திறமை மிக்க கல்வி நிர்வாகியும் ஆகிய பேராசிரியர் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை கணேசலிங்கம் அவர்களைக் கௌரவ விஞ்ஞான கலாநிதிப் பட்டம் வழங்குவதற்காக அறிமுகம் செய்து வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

1935ஆம் அண்டு யூன் மாதம் முதலாம் நாள் கரவெட்டியைச் சேர்ந்த நவிண்டிலில் பிறந்த பேராசிரியர் கணேசலிங்கம் அவர்கள் தமது பாடசாலைக் கல்வியை முதலில் கரவெட்டியிலும் பின்னர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் பெற்றார். 1958ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு அனுமதிக்கப்பட்ட பேராசிரியர் கணேசலிங்கம் அவர்கள் விலங்கியலைச் சிறப்புப் பாடமாகக் கற்று பட்டதாரியாகிய பின் இலங்கைப் பல்கலைக்கழகம், கொழும்பில்செய்முறை காட்டுனராகப் பணி புரிந்தார்.

1965ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்த ஹவாய் பல்கலைக்கழகத்திற்கு கிழக்கு - மேற்கு மைய பலமைப்பரிசில் பெற்றுச் சென்று விஞ்ஞான முதுமானிப் பட்டம் பெற்றார். முதுமானிப் பட்டம் பெற்றபின் இலங்கைப் பல்கலைக்கழகம். பேராதனையில் உதவி விரிவுரையாளராக 1967ஆம் ஆண்டு நியமனம் பெற்றார். 1970ஆம் ஆண்டில் இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்று பேராதனை திரும்பிய பின் புதிதாக நிறுவப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தில் 1975ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் விலங்கியல் பேராசிரியராகவும் விலங்கியல் துறைத் தலைவராகவும்நியமிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில், தாவரவியல், விலங்கியல் துறைகளை ஒழுங்குபடுத்தி அபிவிருத்தி செய்யும் பணி அவரிடம்ஒப்படைக்கப்பட்டது.

அவர் உள்ளூர், வெளியூர் சஞ்சிகைகளில் வெளியான குறிப்பிடத்தக்க ஆய்வுக்கட்டுரைகளின் ஆசிரியராக அல்லது இணை ஆசிரியராக இருந்துள்ளார்.

ஆய்வு முயற்சிகள் பேராசிரியர் கணேசலிங்கம்அவர்களை உலகின் பல பாகங்களுக்கும் அழைத்துச் சென்றுள்ளது. அவற்றுள் உவேல்ஸ் பல்கலைக்கழகம், சுவான்சி (ஐக்கிய இராச்சியம்), பரோடா பல்கலைக்கழகம் (இந்தியா), இலண்டன் இம்பீரியல் கல்லூரி (ஐக்கிய இராச்சியம்) சூழ்நிலை சுற்றுப்புறம் தொடர்பான பூச்சி பற்றிய கற்கைக்குமான சர்வதேச மையம், நைரோபி, கென்யா,தேசிய வரலாற்றுக் காட்சியகம் (ஐக்கிய இராச்சியம்) ஆகியன ஒருசில.

பேராசிரியர் கணேசலிங்கம் அவர்கள் பல கௌரவங்களையம்புலமைப் பரிசில்களையம்பெற்றுள்ளார். பொதுநல நாட்டுப் பல்கலைக்கழகங்களில் கல்விசார் ஊழியர்களுக்கான தோழமைப் பரிசு, Costed தோழமைப் பரிசு, நபீல்ட் பொதுநல நாடுகள் தோழமைப் பரிசு, GTZ தோழமைப் பரிசு, பிரித்தானிய பேரவை தோழமைப் பரிசு ஆகியவை அவற்றுட் சில.

பேராசிரியர் கணேசலிங்கம் பல்கலைக்கழகச் சேவையில் முப்பத்து நான்கு வருடங்கள் மெச்சத்தக்க பணியாற்றிய பின் 2001ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் இரண்டாம் நாள் ஓய்வு பெற்றார். தற்போது இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஆலோசகராகப் பணியாற்றுகிறார்.

*பேராசிரியர் இ.குமாரவடிவேல்*

பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி வே. ஜெயரஞ்சினி



திருமதி ர.தயாமதி

இன்று ஞாயிற்றுக்கிழமை (13.10.2002) யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் Dip.in.Education பட்டத்தைப் பெறும் யா/எழுதுமட்டுவாழ் கணேசா ஆசிரியை செல்வி ஜெயரஞ்சினி வேலாயுத பிள்ளை அவர்களையும், யா/சாவ. இந்துக்கல்லூரி ஆசிரியை திருமதி தயாமதி ரஜீந்திரன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*மாணவர்கள்,*
*கரவீணா இசைமன்றம்.*
*நல்லூர்* [6114]

ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

எமது கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் திருமதி ச. நாகேந்திரன் அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி கமலாதேவி கணேஷ்**
அவர்களின்

ஆத்மா இறைவனடியில் இன்புற்றிருக்க சந்நிதியான் பாதம் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

*பீடாதிபதி,*
*உபபீடாதிபதிகள்,*
*விரிவுரையாளர்கள்,*
*ஆசிரியமாணவர்கள்.*

*தேசிய கல்வியியற் கல்லூரி,*
*யாழ்ப்பாணம்*
*13.11.2002.* [C/5130]

# இன்று ஒரு தகவல்

## ஏழுவகை மனிதர்கள்

இந்த உலகத்தில் எத்தனை வகையான மனிதர்கள் இருக்கிறார்கள்? ஒவ்வொரு மனிதனுமே ஒவ்வொரு வகை என்கிறார்கள் விஞ்ஞானிகள். மனிதர்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம் என்று சொல்லுகிறார்கள் மெய்ஞானிகள். டாக்டர் எட்வாட் பாட்ச்- என்கின்ற நிபுணர் என்ன சொல்கிறார் தெரியுமா? மனிதர்களை ஏழு வகையாகப் பிரிக்கலாம் என்கிறார். மனிதர்களின் மனநிலை அடிப்படையில் அவர்களை ஏழு விதமாக வகைப் படுத்துகிறார் இவர்.

முதல்வகை - பயந்த குணமுள்ளவர்கள். 'சார் மிகுந்த பயந்த சுபாவம்... வீட்டிலே கூடவாயே திறக்கமாட்டார். சாப்பிடப் போகிறபோது மட்டும் தான் கொஞ்சம் வாயைத் திறப்பார் ... அப்புறம் மூடிக்கொள்வார் என்று சில பேரைப்பற்றி நாம் பேசிக் கொள்வதுண்டு அல்லவா? அவர்களெல்லாம் இந்தவகை.

இரண்டாவதுவகைசஞ்சலப் படுகிறவர்கள். எதற்கெடுத்தாலும் கலக்கம் ... குழப்பம். இப்படியே காலம் தள்ளுகிறவர்கள் பலபேரைப் பார்த்திருப்பீர்கள். அவர்கள் எல்லாம் இந்தவகை.

மூன்றாவது வகை:- யதார்த்த உலகை மறந்து கற்பனை உலகத்திலே மிதக்கிறவர்கள். இளைஞர்கள் ... கவிஞர்கள் ... இப்படிப் பலர் இருக்கிறார்கள். எப்பொழுது பார்த்தாலும் கற்பனை உலகத்திலேயே மிதந்து கொண்டிருப்பார்கள் அருகில் நெருங்கி என்ன ... ஒரு மாதிரியாக இருக்கிறீர்க? என்று கேட்டுப் பாருங்க! ஓர் அற்பப் புழுவைப் பார்க்கிற மாதிரி உங்களைப் பார்ப்பார்கள்.

அதோ. .அந்தவானத்தை நிலாவைப் பாருங்கள்! அது என்னை வா! வா! என்று அழைகிறது எனக்கு விரைவில் ஒரு நாள் சிறகுகள் முளைக்கும் சிறகடித்துவானில் பறந்து செல்வேன் அங்கச் செல்ல நிலவைக் கொஞ்சி விட்டு வருவேன். . என்பார்கள். கொஞ்சுவது அப்புறம் இருக்கட்டும். இப்பொழுது சஞ்சிக்கு வழியைப் பாரப்பா! என்றால் அதைக் காதில் வாங்க மாட்டார்கள்; நாம் ஏதோ இந்த உலகத்தை அனுபவிக்கத் தெரியாதவர்கள மாதிரி நம்மைப் பார்ப்பார்கள்.

நாலாவது வகைமனிதர்கள் எப்படித் தெரியும? இவர்கள் தனிமைஉணர்வு மிக்கவர்கள். இவர்கள் மற்றவர்களோடு இயல்பாக நெருங்கிப் பழகுவதில்லை. தான் உண்டு. . . தன்வேலை உண்டு என்று இருந்து விட்டுப் போகிறவர்கள், அடுத்த வீட்டில் இருக்கிறவர் யார்? என்றுகேட்டால் கூட அடுத்த வீடு என்றுஒன்று இருக்கிறதா? என்ன? என்பது போல் நம முகத்தைப் பார்ப்பார்கள். அவர்களிடம் மேற்கொண்டு நாம் எதைப் பேச முடியும்?

ஐந்தாவது வகைமனிதர்கள் எப்படி என்றால், இவர்கள்மற்றவர்கள் செல்வாக்குக்கு உட்படமறுப்பவர்கள். அடுத்தவர்களின் செல்வாக்குக்கு இவர்கள் ஆட்படுவதில்லை. நான் யார் தெரியுமா? என்று கேட்டால். . .அதைத் தெரிந்து கொண்டு எனக்கு என்ன ஆகப்போகிறது என்பார்கள்.

ஆறாவது வகை மனிதர்கள் எப்போதும் எதிலும் பற்றில்லாமல் இருக்கிறவர்கள். இது ஒரு துறவு மனப்பான்மை, இயல்பாகவே சிலர் இப்படி உண்டு. அவர்களுக்கு எதிலேயும் ஓர் ஈடுபாடு இருக்காது.

ஏழாவது வகைமனிதர்கள், மற்றவர்கள் கவலையைத் தன்னுடையதாக ஆக்கிக் கொண்டு கவலைப்படுகிறவர்கள் இவர்கள மகாத்மாக்கள்.

தாம் வேறு அடுத்தவர்கள் வேறு என்கிற எண்ணம் இவர்களுக்கு வருவதில்லை. எனவே, அடுத்தவர்களுக்கு ஒருதுன்பம் வந்தால் இவர்களால் சும்மா இருக்க முடிவதில்லை.

ஆகவே, இப்படி ஏழுவிதமான மனிதர்களை அடையாளம் காட்டுகிறார் அந்த நிபுணர். இதில் நாம் எந்த வகையில் வருகின்றோம் என்பதை தாம் தான் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

எனக்குத் தெரிந்த ஒருமனிதர். அவர்ஒரு வித்தியாசமான வகை. எதையும் நடைமுறை சாத்தியமாகச் சிந்திக்கிறவர். எப்பொழுதும் மற்றவர்களும் நன்றாக இருக்க வேண்டும... நாமும் நன்றாக இருக்க வேண்டும் .என்று ஆசைப்படுபவர். அவருக்குத் திடீரென்று உடம்பு சுகமில்லாமல் போய் விட்டது. டாக்டரிடம்போனார். பணம் கொடுத்து வைத்தியம் பார்த்துக் கொண்டார் அவர் எழுதிக் கொடுத்த மருந்துச் சிட்டை வாங்கினார். ஒரு மருந்துக் கடைக்குப் போனார் பணம் கொடுத்து மருந்து வாங்கினார். அதை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார். அதன் பின் அந்த மருந்தை அவர் சாப்பிட வேண்டுமல்லவா? சாப்பிடவில்லை.

அப்படியே சும்மா வைத்து விட்டார். அவரைப்பார்த்து 'ஏன் சார் இப்படிச் செய்கிறீர்கள் ...வீண் செலவு தானே இது! நீங்கள் ஏன் டாக்டரிடம் போய்ப் பணம் செலவு பண்ணினீர்கள்?' என்று கேட்டேன்.

அவர்டாக்டர்வாழவேண்டு அல்லவா? அதனால் தான் என்றார். சரி அப்புறம் ஏன் மருந்து வாங்கினீர்கள்?' என்றேன. 'மருந்துக்கடைக்காரன் வாழ வேண்டு மல் லவா! அதனால் தான்' என்றார். சரிபின்னர்வாங்கிய மருந்தை ஏன் சாப்பிடாமல் வைத்து விட்டீர்கள்' என்றேன்.' 'நான் வாழவேண்டும் அல்லவா? அதனால் தான்!' என்றார்.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

## கலந்துரையாட அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் முறைசாராக் கல்வி மற்றும் சான்றிதழ் பயிற்சிய க. ணனி கல்வி பயின்று இதுவரை சான்றிதழ்கள் பெறாதுள்ளவர்களுக்கு சான்றிதழ் வழங்குவது பற்றிக் கலந்துரையாட சம்பந்தப்பட்டவர்களை நாளை மு.ப 10.00 மணிக்கு கல்லூரியில் ஒன்று கூடுமாறு கல்லூரி அதிபர் க இராசதுரை கேட்டுள்ளார். (உ-10)

## மீன்பிடி ஆரம்பம்

(தென்மராட்சி)

தென்மராட்சியிலுள்ள கோயிலாக்கண்டி கிராமத்தைச் சேர்ந்த 161 மீனவர்கள், இரண்டரை வருடங்களின் பின்னர் மீண்டும், தமது மீன் பிடித்தொழிலினை ஆரம்பித்துள்ளனர்.

கோயிலாக்கண்டி, அரியாலை கடற்பரப்பில் இவர்கள் தமது தொழிலை மேற்கொண்டுவருகின்றனர். (உ-77)

# கடற்றொழில் குழு அமைத்தல் பற்றி யாழ். செயலகத்தில் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நாடு தழுவிய ரீதியில், கடற்றொழில் அமைப்பு மற்றும் கடற்றொழில் குழு அமைத்தல் தொடர்பாக ஆராயும் கூட்டம் யாழ். செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கடற்றொழில் அமைச்சின் நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி பீ. எஸ். எல். கலபதி, கடற்றொழில் அமைச்சின் வடபகுதிப் பணிப்பாளர்என்.வீ.சி.பெனாண்டோ யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உதவிப் பணிப்பாளர் ஏ. ஜோசப் மற்றும் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகள், நீரியல்வளத்துறைத் திணைக்கள அதிகாரிகள், கிராமிய கடற்றொழிலாளர் சங்க அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு கடற்றொழில் அமைச்சின் நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி பீ. எஸ். கலபதி கருத்துக் கூறுகையில்;

நவீன தேசிய மற்றும் பல்தேசிய நிபுணத்துவத்திற்கு மத்தியில் இலங்கையின் கடற்றொழில் துறையையும், கடற்றொழிலாளர்களையும் அபிவிருத்தி செய்வது மாபெரும் சவாலாகவுள்ளது;

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ். குடாநாட்டில் உள்ள ஒவ்வொரு இறங்குதுறைக்கும் கடற்றொழில் அமைச்சு10 இலட்சம் ரூபாவை வழங்கவுள்ளது.

இந்த 10இலட்சம் ரூபாவை வழங்குவதன் நோக்கம் குடாநாட்டில் கடற்றொழிலைஅபிவிருத்தி செய்வதாகும்.

வடமாகாணத்தில்75இறங்குதுறைகள்உள்ளன. அவற்றுக்கு 75மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

யுத்தம் காரணமாக மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பாதிப்புகளில் இருந்து மீள்வதற்கும், எமது தேசிய வளமான கடல் வளத்தை அபிவிருத்தி செய்வதற்கும் கடற்றொழில் அமைச்சு உறுதி பூண்டுள்ளது என்றார். (உ-6,7)

# மக்களின் விருப்பு வெறுப்புகளை அரசு புறக்கணித்து நடக்கிறது

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசு எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது, நாட்டின் ஜனநாயகத்துக்கு விரோதமானபல சட்டமூலங்களை நிறைவேற்ற முயல்கிறது என எதிர்க்ட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஸ்ரீ லங்கா சுதந்திர ஊழியர் சங்கத்தின் வருடாந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்! நாட்டின் ஜனநாயகத்துக்கு குந்தகம் விளைவிக்கும் பல சட்டமூலங்களை கொண்டு வர முயலும் இத்தகையதொரு அரசாங்கத்தை, மக்களுக்காக செயற்படும் அரசாங்கம் என எவ்வாறு கூறுவது என வினா வெழுப்பினார்.

மேலும், நாட்டு மக்களின் விருப்பு, வெறுப்புக்களை புரிந்து கொண்டு அவர்களுக்காக செயற்படுவதே ஒரு அரசுக்கு அழகு.

இதை மீறிச்செயற்பட்டால் அது அரசின் தான்தோன்றித் தனத்தின் வெளிப்பாடே எனவும் அவர் அங்கு தெரிவித்துள்ளார்.

(உ.-8)

## அழைப்புக் கடிதம் கிடைக்காதோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்காக விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் கிடைக்காதவர்கள் உடன் தாங்கள் விண்ணப்பங்களை பதிவு செய்த தபாற்கந்தோர் பற்றுச்சீட்டுடன் சம்பந்தப்பட்ட கல்லூரிகளின் பீடாதிபதிகளைச் சந்திக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

நடனம், சங்கீதம் ஆகிய துறைகளுக்கு விண்ணப்பித்து நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் செய்முறைப் பரீட்சைக்கும் தோற்ற வேண்டியுள்ளதால்அதற்கான ஆயத்தங்களுடன்குறிப்பிட்ட தினங்களில் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்குமாறு கேட்கபபட்டுள்ளது. (உ)

## சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

(அச்சுவேலி)

பிடியாணைக்குரியவர்களை கைது செய்யச் சென்ற பொலிஸாரை, கடித்துக் காயப்படுத்திய இரு சந்தேக நபர்களையும் இரண்டு வாரகாலம் விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் அ. பிறேம்சங்கர் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை, அதிகாலை துன்னாலை ஆட்டுப்பட்டிக் கொலனியில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக, இதே இடத்தைச் சேர்ந்தவர்களான சி. ரஜனிகாந் (வயது 26), க. ரவிக்குமார் (வயது 25) ஆகிய இருவரையும், நெல்லியடி பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்திருந்தனர்.

கைகளில் கடி காயங்களுக்கு இலக்கான பொலிஸார் மூவரும் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (உ-14)

## திருமலை வழமை நிலைக்குத் திரும்பியது

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் அமுல் படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக்காலைநீக் கப்பட்டுள்ளது.

தற்போது நிலமைகள் யாவும் வழமைக்கு திரும்பியுள்ளதனால், மீண்டும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கும் அவசியம் இல்லை என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகே தெரிவித்துள்ளார்'

(உ-8)

## அக். 22-25 திகதி வரை பாராளுமன்றத்தைக் கூட்ட கட்சி தலைவர்கள்இணக்கம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தை எதிர்வரும் 22 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதிவரை தொடர்ந்து கூட்டுவதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்ட சட்ட மூலங்கள் குறித்து கட்சித்தலைவர்களால் அறிவிக்கப்பட்ட போது எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலர் இதற்குஎதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்துக்கு நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை, பாதுகாப்பு அமைச்சு திலக் மாரப்ப மீதான நம்பிக்கையில்லாப்பிரேரணை என்பன விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளாதது ஏன்? என அவர்கள் கேள்வி எழுப்பியதுடன்,

முக்கிமாக விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் இருக்க கட்சித்தலைவர்களால் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள உத்தேசிக்கபட்ட இச் சட்ட மூலகங்களினால் பயன் ஏதும் இல்லை எனவும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்தப்பிரேரணைகள் யாவும் குறிப்பிட்ட திகதியில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என கேட்கப்பட்டபோதும், அதற்கு அரசாங்கம் சந்தர்ப்பம் அளிக்காததாலேயே, தங்களது எதிர்ப்பை எழுத்து மூலம்தெரிவிப்பதாகவும்அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான தினேஷ் குணவர்த்தன, மங்களசமரவீர, விமல் வீரவன்ச, மற்றும் பேரியல் அஷ்ரப் ஆகியோரே விவாதத்துக்கு உத்தேசிக்கப்பட்ட சட்ட மூலங்களுக்கு எதிர்ப்பு தெரிவிததுள்ளனர்.

(உ-8)

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம மேற்கு பிரதேச செயலகத்தில் நாளை மு.ப. 10.00 மணிக்கு நலன்புரிச் சங்கத் தலைவர் மு. சிவராசா தலைமையில் 'நவராத்திரி விழா' கொண்டாடப்படவுள்ளது. (உ-10)

# தீவிரவாதத்தை முறியடிக்கும் சக்தி
# இராணுவத்திடம் இருப்பது அவசியம்
## இராணுவத் தளபதி லயனல் பலகல்ல

(கொழும்பு)

அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அரசாங்கம் மிகவும்அவதானமாக செயற்படுத்தி வருகிறது. இந்நிலை தொடர இராணுவத்தினரின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது.

இலங்கை இராணுவத்தின் 53வது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி கடந்த வியாழக்கிழமை காலை இராணுவத்தலைமையகத்தில் இடம் பெற்ற வைபவத்தில் உரையாற்றிய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லயனல் பலகல்ல இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

இராணுவத்தினரின் தற்போதைய போக்கானது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, மீண்டும் ஒரு முறை தீவிரவாத நடவடிக்கைகள் தலை தூக்கினால் அதனை முறியடிக்கும் சகல சக்திகளும் இராணுவத்திடம் இருப்பது அவசியமானது.

இது விடத்தைக் கருத்தில் கொண்டு நாம் தொடர்ந்தும் பயிற்சிகளைப் பெறவேண்டும்.

அத்துடன், ஒற்றுமையுடனும் ஒழுக்கத்துடனும் செயற்பட்டு இராணுவத்தின் கௌரவத்தைக்காகதிடசங்கற்பம் பூண வேண்டும்.

தமிழீழத் தாயகம் என்ற கொள்கையே இலக்காகக் கொண்டு ஆயுதம் ஏந்திப் போராடிய தமிழீழ விடுதலைப்புலிகள். இன்று நாட்டில் அமைதி ஏற்பட ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள முன் வந்திருப்பது இலங்கையரான நாம் செய்தபாக்கியம் என்று குறிப்பிட்டார்,

தொடர்ந்தும் உரிமையாற்றுகையில்;

நாட்டில் இப்போது ஏற்பட்டுள்ள நல்ல சூழ் நிலையைக் குழப்ப முயற்சிக்கின்ற தீய சக்திகளை விரட்டியடிக்க நாமனைவரும் தயாராக வேண்டும்.

நாட்டுக்காக தமது எதிர்கால வாழ்வை அர்ப்பணித்து வீரமரணம் அடைந்தும், காணாமல் போயும், ஊனமுற்றும் உள்ள படைவீரர்களுக்கும் நானும் இராணுவ அதிகாரிகளும் விசேடமாக நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

அவர்களின் பணி பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் என்று குறிப்பிட்டார். (உ-5)

# ஜனாதிபதி - பிரதமர் இழுபறி
# பங்குச்சந்தையில் எதிரொலி

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்காவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கும் இடையிலான உறவுகள் மோசமடைந்து வருவதைத் தொடர்ந்து கொழும்புப் பங்குச்சந்தையின் சாதக நிலை வீழ்ச்சி கண்டுள்ளது.

அண்மைக் காலத்தில் ஏற்பட்ட சமாதானம் பற்றிய எதிர்பார்ப்பை அடுத்து, வளர்ச்சிஅடைந்த நிலையில் காணப்பட்ட கொழும்புப் பங்குச்சந்தை இவ்வருடம்ஆசியாவின் சிறந்த பங்குச் சந்தையாக இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக்குறைப்பதற்குஅரசாங்கம் 19ஆவது அரசிலமைப்பு சட்டத்தில் சீர்திருத்தங்களை கொண்டு வரவுள்ளமையும் இது வெற்றி பெறுமா என்பது குறித்து நிச்சயமற்ற நிலையும் கொழும்பு பங்கு சந்தையில் கடுமையாக எதிரொலித்துள்ளதாகபொருளியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (உ-7)

## இராசி பலன்

13-10-2002
(புரட்டாதி 27, ஞாயிறு)
அட்டமி பி. இ 4. 19வரை
பூராடம் மாலை 6. 23வரை
இராகு காலம் 4. 32- 6. 02
நல்ல நேரம் 9. 02- 10. 32
சித்தாமிர்தம்

**மேடம்**
மனக்கட்டுப்பாடு, தொழில் சிந்தை, பெரியோர் ஆதரவு, முயற்சி கைகூடும்.

**இடபம்**
காரிய தடங்கல், உறவினர் வெறுப்பு, வாகன பயம், சிறுவியாதி

**மிதுனம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, குடும்பத்தில் மகிழ்ச்சி, காரிய அனுகூலம், தனவரவு

**கடகம்**
இலட்சுமீகரம், தேக ஆரோக்கியம், விருந்துபசாரம், நல்ல காரியம்

**சிங்கம்**
சொத்துக்களால் மனஸ்தாபம், தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, தொழில் சிந்தை,

**கன்னி**
தன்னம்பிக்கைக் குறைவு, அற்பர் உறவு, முயற்சி தாமதம், கல்வியில் ஆர்வம்

**துலாம்**
நினைத்தகாரியம்கைகூடும், கூட்டுமுயற்சி, வாக்கு மேன்மை, சுவாரஸ்யம்

**விருச்சிகம்**
உறவினர் வருகை, பொருள் வரவு, கௌரவக் குறைவு, முயற்சி தாமதம்

**தனுசு**
நல்ல முயற்சி, ஜனவசியம், நிலைமாற்றம், சயனசுகம்

**மகரம்**
பிதாவழி உறவு, தனவிரயம், பிரயாணம், காரிய தாமதம்

**கும்பம்**
தெய்வ அனுகூலம், நல்ல வரவேற்பு, காரிய நன்மை, தனவரவு

**மீனம்**
கடின முயற்சி, கீழ்ப்படிவு, ரோகபயம், தர்மம்

(பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது)

வளவன்

## பெற்றோலிய பொருள் சட்டமூலம்

(கொழும்பு)

பெற்றோலிய உற்பத்திப் பொருள்கள் தொடர்பான விசேட சட்டமூலம் நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் 32 மேலதிக வாக்குகளால்நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்ட மூலத்துக்குஆதரவாக 98 வாக்குகளும், எதிராக 66 வாக்குகளும் அளிக்கப்பட்டன. (உ-8)

## 32 பேருக்கு இலவச கண்ணாடி

(தென்மராட்சி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகம், கண்பார்வை குறைந்த 32 பேருக்கு மீசாலையில் நடத்திய கழக வைபவத்தில் மூக்குக் கண்ணாடிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் கழகத் தலைவர் லயன் செ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வித்தியாலய அதிபர் இ. சிவானந்தன் பிரதம விருந்தினராகப் பங்கு கொண்டு கண்ணாடிகளை அணிவித்து வைத்தார். (உ-77)

## அடுத்த ஆண்டு முதல் இயந்திர உதவியுடன் கடிதங்கள் தரம் பிரிப்பு

(கொழும்பு)

அடுத்த வருடம் முதல் கடிதங்களை தரம் பிரிப்பதற்கு இயந்திரம் உபயோகப்படுத்தப்படவுள்ளதாக தபால்மா அதிபர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனை நடைமுறைப்படுத்தும் வகையில் அடுத்தவருடம் முதல் கடித உறைகளில் தபால் நிலைய குறியீட்டு இலக்கம் பொறிக்கப்பட வேண்டியது அவசியம் எனவும்,

இப்போதிருந்தே தபால் நிலையங்கள், உபதபால்நிலையங்களில் குறியீட்டு இலக்கங்களை காட்சிக்கு வைக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்டுள்ளது.

இதன்படி, அனுப்பும் கடிதங்களில் விலாசம்பெயருடன் இவ்விலக்கத்தையும் குறிப்பிடுவதை உறுதி செய்து கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் உள்ள சகல பிரதேசசெயலாளர் பிரிவுகளிலுள்ள தபால் அலுவலங்களில் அதற்குரிய இலக்கங்களை வழங்க ஏற்பாடு செய்பட்டுள்ளது. (உ-7)

## பனம்விதை நடுகை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரப் பகுதியில் பனைவிதைநடுகைத் திட்டத்தினை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது. (உ)

## ஒலிப்பதிவு நாடா வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணி ஐயர் இயற்றிய கோண்டாவில கிழக்கு ஸ்ரீ வல்லிபுர நாதர் தேவஸ்தான கீர்த்தனை 1 ஒலிப்பதிவு நாடா வெளியீட்டுவிழா நாளைநண்பகல் 12.00 மணிக்கு தேவஸ்தான முன்றலில் தேவஸ்தான உபதலைவர் செ.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரையை மஹோற்சவ பிரதமகுருக்கள் சிவஸ்ரீ குகதாசக் குருக்களும், மதிப்புரையை தமிழ்த்துறை பேராசிரியர்கலாநிதி எஸ்.சிவலிங்கராசாவும் வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக நடனத்துறைத்தலைவர்பேராசிரியர்சபா.ஜெராசாவும்வழங்கவுள்ளனர்.

இந்.நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட முன்னாள் அரச அதிபர் க.சண்முகநாதனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழகவணிகத்துறைத் தலைவர் கே.தேவராசா, ஸ்ரீ நாராயண சனசமூக நிலைய தலைவர் கோ.நரேந்திரன், தாவடி சாயி சேவா நிலையத்தைச் சேர்ந்த கே.தியாராசா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ரி.எம்.எஸ் செல்வகுமார், ரி.எம்.எஸ் சந்திரிகா ஆகியோர் இப்பாடல்களை பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## ஏ-9 கண்டி வீதி புனரமைப்பு பூர்த்தி

(வவுனியா)

ஏ-9 பாதையின் தற்காலிக புனரமைப்பு வேலைகள் யாவும் முடிவடைந்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வவுனியாக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இதனால், யாழ்ப்பாணத்தில் இருந்து ஓமந்தை வரையிலான ஏ-9 பாதையில் வாகனப் போக்குவரத்தில் ஏற்பட்டபிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இப்பாதையைமுழுமையாக புனரமைப்பதற்கு 500 மில்லியன் ரூபாவுக்கு அதிகமான தொகை தேவைப்படும் எனவும், தற்போதையபுனரமைப்புவேலைகள்தவிரமிகுதிப்புனரமைப்புப் பணிகள் அடுத்தமாதம்ஆரம்பமாக உள்ளதாகவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவ் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியை எதிர்பார்ப்பதாகவும் அது மேலும் தெரிவித்துள்ளது. (உ-5)

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத கைலாசநாத சுவாமி தேவஸ்தானத்தில் நாளை நவராத்திரி விழாவும் சுவாசினி பூஜையும் நடைபெறவுள்ளது.

மறு நாள் செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணிக்கு அந்தணச் சிறார்களிற்கான சமஸ்கிருத வகுப்பு ஆரம்பமாகவுள்ளது. (உ-10)

●

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஸ்ரீ கணேசமகா வித்தியாலயம் வாணிவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமைமு.ப. 10.00 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் எஸ்.கே. சண்முகலிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலய உதவித் திட்டமிடல் கல்விப் பணிப்பாளர் எஸ். மகேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக தீவக வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் த. தவராசா மற்றும் இளைப்பாறிய அதிபர் சி. இரத்தின சபாபதி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-10)

●

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை ஊழியர் நலன்புரிச் சங்கம் நடத்தும் வாணிவிழா எதிர் வரும் 15ஆம் திகதி செவ்வாய் கிழமை மு.ப 10.00 மணிக்கு நலன்புரிச் சங்கத் தலைவரும் யாழ். மாநகர சபை ஆணையாளருமானஇ. இராமலிங்கம் தலைமையில் நல்லூர் பண்டாரமாளிகை வளவில்அமைந்துள்ள இறைவரிப்பகுதி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (உ-6)

## மீளக்குடியமர்வு நிதி விரைவில்

(தென்மராட்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த முகாவில், கோவில் வயல், இயக்கச்சி, மாசார் ஆகிய நான்கு கிராமசேவையாளர் பிரிவுகளில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு மீளகுடியமர்வு நிதியாகிய 15 ஆயிரம ரூபா இம்மாத இறுதியில வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. (உ-77)

## கலை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இன்று இடம்பெறவுள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவை ஒட்டிய கலை நிகழ்வுகள் நாளை காலை 9.00 மணி முதல் 12.30 மனிவரை கைலாசபதி கலையரங்கில் இடம்பெறுமென பதிவாளர் அறிவித்துள்ளார். (உ)

## ஜி. ரி. சற் உதவி

(யாழ்பபாணம்)

தாவடி இந்துத் தமிழ் கலவன் பாடசாலையில் இடப்பற்றாக்குறை நிலவி வருகிறது.

இதனை நிவர்த்தி செய்ய ஜி. ரி. சற் நிறுவனம் 13 இலட்சம் ரூபாவினை ஒதுக்கியுள்ளதாக கல்லூரி அதிபர் செல்வராசா தெரிவித்துள்ளார். (உ-10)

# விளையாட்டுத் துறையில் விற்பன்னரான ரீ.ஈ.ஆனந்தராஜா

## படிப்படியாகப் பதவியுயர்ந்து பொலிஸ்மா அதிபரானார்



இலங்கையின் பொலிஸ்மா அதிபராக ரீ.ஈ.ஆனந்தராஜா 03.10.2002 வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு சத்தியப் பிரமாணம் செய்து. மதத் தலைவர்களின் நல்லாசியுடன் சம்பிரதாய முறைப்படி தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

பதவியிலிருந்த பொலிஸ்மா அதிபர் காலமானதைத் தொடர்ந்து பொலிஸ்மா அதிபர் பதவிக்கு ஆனநதராஜாவின் பெயரை அரசியல் அமைப்பு நிர்ணயசபை அங்கீகரித்து ஜனாதிபதி சந்திரிகாவின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைத்தது.

அதேவேளை ஆனந்தராஜா அவர்களின் நியமனத்தை ஆட்சேபித்து, அவருடன் கடமையாற்றிக் கொண்டிருந்த D.I.G கொட்டகதெனியா பல்வேறு புகார்களை அரசியல் அமைப்பு நிர்ணய சபைக்கு சமர்ப்பித்ததுடன், நீதி மன்றிலும் வழக்குத் தாக்கல் செய்தார்.

### நியமனம் வழங்கப்பட்டது

ஆனால் ஆனந்தராஜா மீது சுமத்தப்பட்ட புகார்களில் எந்தவித ஆதாரமோ, உண்மையோ இல்லை என்பது நிருபணம் ஆனதைத் தொடர்ந்து அரசியல் அமைப்பு நிர்ணய சபையின் சிபார்சு ஜனாதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நியமனமும் வழங்கப்பட்டது.

26ஆவது பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள ஆனந்தராஜா இப்பதவியை வகிக்கும் 2ஆவது தமிழர் என்பதும் 24ஆவது பொலிஸ்மா அதிபராக உருத்திரா இராசசிங்கம் கடமையாற்றியுள்ளார் என்பது இடைச்செருகலாகக் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் ஒன்றாகும்.

### சிறந்த விளையாட்டுவீரர்

இவர் ஒரு சகலதுறை விளையாட்டு வல்லுனர். பொலிஸ் திணைகளத்தில் உதைபந்தாட்டம், ரென்னிஸ் பகுதிகளின் (CHAIRMAN) செயர்மன் ஆக இருந்ததுடன் கடந்த 5 வருடங்களாக இலங்கைப் பொலிஸ் அணிக்குத் தலைமைதாங்கி இந்தியாவில் பெங்களூர், சென்னை ஆகிய இடங்கில் இடம்பெற்ற சர்வதேச ரென்னிஸ் போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

அத்துடன் கணிசமான காலம் அகில இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் சிரேஸ்ட உபதலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

### ஹாட்டிலியில் சிரேஷ்டமாணவத்தலைவர்

மட்டக்களப்பைத் தாயகமாகக் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வியை கல்முனை வெஸ்லிக் கல்லூரியிலும், பின்னர் மட்டக்களப்பு மெதடிஸ் மத்திய கல்லூரியிலும், மேற்கொண்டார்.

அதன் பின் தனது கல்வியை யாழ் ஹாட்லிக் கல்லூரியில் தொடர்ந்தார். அங்கு கல்வி கற்ற காலத்தில் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், மெய்வல்லுனர் அணிகளில் அங்கம் வகித்து கல்லூரிக்குப் பேரும் புகழுமஈட்டிக்கொடுத்ததின் பயனாக உதைபந்தாட்டம், மெய்வன்மை, ஆகிய இரண்டு விளையாட்டிலும் கல்லூரி (COLOURS) களேசைப் பெற்றார்.

அத்துடன் கல்லூரியின் மாணவத் தலைவனாக (3)சில வருடங்கள் இருந்ததுடன் 1962ஆம் ஆண்டு சிரேஷ்ட மாணவத் தலைவர் பதவியையும் அடைந்தார்.

### பல்கலைத் தெரிவு அணியில்

அதன் பின் 1963ஆம் ஆண்டு தொடக்கம் 1966ஆம் ஆண்டு வரை பெரதெனியா பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டதாரியானானர்.

அங்கு பயின்ற காலத்திலும் பலகலைக்கழத்தின் உதைபந்தாட்ட அணியில் அங்கம் வகித்து ஆடியதுடன் பல்கலைக்கழகங்கள் ஒன்றிணைந்த தெரிவு அணிக்கும் தெரிவாகி ஆடியுள்ளார்.

**கப்டன் டீ.எ.எம். குணசிங்கம் ஜே.பி**

அக்காலப்பகுதியில் சபஇன்ஸ்பெக்டராகச் சேர்வதற்கு எஸ்.எஸ்சி பரீட்சையில் சித்தியடைந்து 5அடி 8அங்குலத்திற்குக் குறையாத உயரமும் 34அங்குலத்திற்குக் குறையாத மார்புச் சுற்றளவும் இருந்து விளையட்டுத்துறையில் ஈடுபாடும் இருந்தால் போதுமாகும்.

### உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்

A.S.P ஆக நேரடியாகச் சேருவதாய் இருந்தால் பட்டப்படிப்பை இலங்கைப் பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்று பட்டதாரியாகவும் மேலே குறிப்பிட்ட ஏனைய தகுதிகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆனால் ஆனந்தராஜா அவர்களிடம் A.S.P ஆக நேரடியாக இணைந்து கொள்வதற்கு அவசியமான தராதரம் இருந்தும் 1967ஆம் ஆண்டு ஒரு சப் இன்ஸ்பெக்டராக பொலிஸ்திணைக்களத்தில் சேர்ந்து கொண்டார். அதன் பின் 1971ஆம் ஆண்டு தற்காலிக A.S.P ஆகப் பதவி உயர்வு பெற்றார்.

அத்துடன் இவர் நின்றுவிடவில்லை 1975ஆம் ஆண்டு திறந்த பல்கலைக்கழகத்தில் பயின்று L.L.B பட்டத்தைப் பெற்றார். 1990ஆம் ஆண்டு பெரதெனியா பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப்பட்டப் படிப்பை மேற்கொண்டு குற்றவியல் டிப்ளோமா (Diploma in Criminology) கற்கை நெறியை பூர்த்தி செய்தார்.

மேலும், இவர் A.S.P, S.P, S.S.P ஆக அம்பலாங்கொட, எலப்பிட்டியா, மொனறாகல, யாழ்ப்பாணம், தங்கெல்ல, கொழும்பு ஆகிய பிரிவுகளில் கடமையாற்றியுள்ளார்.

இன்னும் 1995இல் இருந்து 1998ஆம்ஆண்டு காலப்பகுதியில் செய்தித் தொழில் நுட்ப (News Technoloby) பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் (D.I.G) (S.L.R.P) ஆக கடமையாற்றி 2000ஆண்டு சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகப் பதவி உயர்வு பெற்றார்.

பொலிஸ்மா அதிபராக நியமனம பெற்றதும் முதல வேலையாக வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ்பேசும் மக்கள், பொலிஸ் நிலையங்களில் செய்யும் முறைப்பாடுகளைத் தமிழில் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

### இடம் பெயர்ந்த மக்களுக்கு ரின்மீன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்குப் பகுதிகளில இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக் கென ஜப்பான் நாடு மீன் ரின்களை வழங்கியுள்ளது.

இந்த வகையில் 2கோடி 8இலட்சம தொன் மீன் ரின்களை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவிடம் ஜப்பானியத் தூதுவர் சேச்சினோ றெற்க்கோ அண்மையில் கையளித்துள்ளார். (உ)

### வன்முறைகளுடன் ஜே.வி.பி.க்கு தொடர்புண்டு

(கொழும்பு)

திருகோணமலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் மக்கள் விடுதலை முன்னணி இருப்பதாக பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஏ.எச்.எம் அஸ்வர் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றம் கூடியபோது திருகோணமலை சம்பங்கள் குறித்து ம.ஐ.மு.எம்.பி தினேஷ் குணவர்த்தன, ஜே.வி.பி. எம்.பி அனுராகுமார் திஸ்ஸநாயக்க ஆகியோர் சபையின் கவனத்துக்குக் கொண்டுவந்ததுடன பாராளுமன்றம் முடிவடைவதற்குள் இதுகுறித்து சபைக்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்றும கேட்டுக் கொண்டனர்.

இதன்போது அமைச்சர் அஸ்வர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

சமாதான முயற்சிகளைக் குழப்பும் கொலைகாரர்கள் என்றும் விமர்சித்தார் (உ)

# பிறந்த திகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து!

# சிறந்ததாக வாழ்க்கையைச் சீர் செய்யுங்கள்.

*சென்றவாரத் தொடர்ச்சி ......*

### உடல் எண் 3- உயிர் எண்-2

3,12,21,30 போன்ற தேதிகளில் பிறந்து பிறந்ததேதி மாதம் வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 2 வந்தால் குரு,சந்திரன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் உயரத்திற்கு ஏற்றாற் போல் நல்ல சதைப்பற்றுள்ளவர்களாகவும் பார்ப்பதற்குத் தைரியசாலி போன்றும் காட்சியளிப்பர். இளமையிலேயே இன்பதுன்பங்களை அனுபவித்த இவர்கள் காதல் வசப்பட்டு தனது திருமண வாழ்க்கையை அமைததுக் கொள்வர். இவர்களில் சிலர் அரசாங்க உத்தியோகததில் இருக்கின்றனர். இவர்களது கூட்டு எண் இரண்டாகிய சந்திரன் வருவதால் சந்திரன் தேய்ந்து வளருவதுபோல மன நிலையும் ஏற இறங்கவே இருக்கும்.

இவரது திட்டங்கள் நிலையானதாகவே இருக்காது. இயற்கையாகவே யோகம் மிகுந்தவர்களாதலால் வீடு, நிலம், வாகனம், நல்ல மனைவி, நல்ல குழந்தைகள் அமைந்து விடுகின்றன. இவர்களிடம் நேர்மையான குணமும் உண்மையான அன்பும் துன்பப்படுவரைக் கண்டு இரங்குவதும் இயற்கையிலேயே உண்டு. சில நேரங்களில் முரடர்களாக இருந்தாலும் அடுத்த நிமிடம் சாத்வீக குணம் தோன்றும். தன்லாபத்திலே கண்ணும கருத்துமாக இருக்கும் இவர்கள் தனக்கு வருகின்ற இடையூறுகளை முன்கூட்டியே உணர்ந்து தகர்த்தெறிவர். சிறு சிக்கல் ஏற்பட்டாலும் பெரிதாக எண்ணிக் குழம்புவர். தனக்கென்று வருகின்ற பிரச்சினையிலும் திடசித்தம் இராது. வாகனப் பிரியரான இவர்கள் வாகனம் ஓட்டுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள். தனது மனைவி, குழந்தைகள் போன்றவர்களிடம் பேரன்பு வைத்திருப்பவராவர்.

சிறு தவறுகளைத் தனக்கு வேண்டியவர்கள் செய்தால் அதைச் சொல்லிக்காட்டுவர். இவரது மனம் மங்கையிடமும் மதுவிடமும் நாட்டம் கொள்ளும். ஆனால் ஆரம்பத்திலேயே பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாகப் பெயரை அமைத்துக் கொண்டால் கெட்ட வழியில் மனம் செல்லாது கலையார்வம் கொண்ட இவர்கள் கலையை வளர்ப்பதிலும் தனது கலாசாரத்தைக் கட்டிக் காப்பதிலும் கண்ணும் கருத்துமாய் இருப்பர். ஆண்டவனின் பேரருளைப் பெற்ற இவர்கள் உழைப்பிற்கு மிகுதியாகவே வருமானத்தைப் பெறுவர். இந்த எண்ணின் ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்குத் திரவ சம்பந்தமான தொழிலாலும் கமிஷன் ஏஜென்சீஸ், காண்ட்ராக்ட் கெமிக்கல்ஸ்போன்ற வைகளாலும் வருமானத்தைப் பெறும் பாக்கியம் உண்டு.

**சோதிட பலன்**

இவர்களுடைய பிறந்ததேதி எண்களுக்குப் பொருத்தமானதாகப் பெயர் அமையாவிட்டால் மனத்தைரியம் இல்லாது எதையும் செய்ய அஞ்சுவர் இவர்களது மனம் வீடுகளை அழகாக வைத்துக் கொள்வதிலும் ஆடம்பரப பொருட்களைச் சேர்ப்பதிலும் நாட்டம் கொள்ளும் நல்ல பேச்சுத் திறமை கொண்ட இவர்கள் மனதில் உள்ளதை மறைக்காது சில நேரங்களில பேசிவிடுவர். மிகைப்படுத்திப் பேசும் ஆற்றல் இருப்பதால் இவர்கள் கண்ட இயற்கைக் காட்சிகளை நன்றாக வருணிப்பர். பிறர்பொருளை அபகரிக்கும் எண்ணம் இல்லாத இவர்கள் தனது உடைமைகளைக் கட்டிக் காப்பர். தூரதேசப்பயணங்களை மேற்கொண்டு வரலாற்றுப் புகழ் மிக்க இடங்களையும் கோயில்களையும் கலைக்கூடங்களையும் கண்டு களிக்க ஆசைப்படுவர். இவர்களுக்கு மனைவி மந்திரி போன்று அமைந்து விடுவதால் வீட்டில் குழந்தை போன்று காட்சியளிப்பர். பொதுவாக இந்தத் தேதியில் பிறந்தவர்கள்யோகம் மிகுந்தவர்களே!.

பிறந்த தேதிக்குப் பொருத்தமான பெயர் அமையாவிட்டால் சர்க்கரை வியாதி, ரத்தக்கொதிப்பு,கண் நோய் மணப்பீதி போன்றவை வரும். இதனால் பெயரைக் கீழே குறிப்பிட்டபடி பொருத்தமானதாக மாற்றிக் கொண்டால் நோய்கள் குறையலாம். இளமையான வாசகர்கள் முன்கூட்டியே இனிப்பு உப்பு போன்றவைகளைக் குறைத்தும். பெயரைப் பொருத்தமானதாக மாற்றிக்கொண்டும் வாழலாம்.

### தொழில்

இவர்களுக்கு அழகு சாதனங்கள், கமிஷன்,கண்ட்ராக்ட், ஏஜென்ஸீஸ் போன்ற தொழில்களைச் செய்வதால் லாபம் உண்டாகும்.

### நோய்

பொதுவாக இவர்களுக்கு சர்க்கரை வியாதி இரத்தக்கொதிப்பு, கண்நோய், தோல் சம்பந்தமான வியாதிகள் வரும். இதனால் பெயரைப் பொருத்தமானதாக மாற்றி அமைத்துக்கொள்வது சிறப்பாகும்.

### பெயர் அமைக்கும் முறை

இந்த ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்கு குரு ஆதிக்கமாகிய 2,1,39 போன்ற எண்களிலும் புதன் ஆதிக்கமாகிய 14,23,41,50,59 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

### பின் பற்றவேண்டியவை

யோகமான எண் 3,7,5 யோகமான தேதிகள் 3,12,21,30,7, 16,25,5,16,23, யோகமான மோதிரக்கல், எமிதிஸ்டு சந்திரகாந்தக்கல், ரைகர்ஜ, யோகமான நிறம் - ரோஸ்,ஆரஞ்சு கத்தரிப்பூ நிறம் ஆகாத நிறம் பச்சை,சிவப்பு ஆகாத தேதிகள் 6,15,24,9,18,27,.

### உடல் எண்-3 உயிர் எண்-3

3,12,21,30 போன்ற தேதிகளில் பிறந்து தேதி, மாதம்,வருடம் ஆகியவற்றை கூட்டி வருகின்ற கூட்டு எண் ஆகிய உயிர் எண் 3 வருமேயானால் குருவின் முழு ஆதிக்கத்தைப் பெற்றவராவார். இவர்களுக்குப் பெயரும் 3எண்ணிக் கையில் அமைந்து விட்டால் குருபலம் மிகுதியாகும் இவர்கள் இயர் கையாகவே நீதி நேர்மை நிதானம், நாணயம், நம்பிக்கை, நல்லெண் ணம் பெற்று வாழ்வர். இரட்டை நாடி கொண்ட இவர்கள் நல்ல தோள் வலிமையுடனும் மெல்லிய தலைமுடியுடனும இளமையிலேயே வழுக்கையுடன் கூடிய தலையுடனும் காட்சியளிப்பர். முன்பற்கள் இரண்டும் பெரிதாக இருக்கும். முத்துப் போன்ற பற்களைக் கொண்ட இவர்கள் எப்போதாவது சிரிக்கின்றபோது கவர்ச்சியாகக் காணப்படுவர்.

தான் சிந்திக்கின்ற கருத்துக்களை விவாதிக்கின்ற போது தெளிவாக விளங்குவர். தான் பேசுகின்ற மொழி சுத்தமாகவும் தெளிவாகவும் கவர்ச்சியாகவும் இருக்கும். பிறர் தன்னை மதிக்க வேண்டும் என்பதற்காகப் பழக்கங்களை அளவோடு வைத்துக் கொளவர். பேசுவதாலும் எழுதுவதாலும் மக்களைத் திருத்த முற்படுவர். தான் செய்கின்ற தொழில் மூலம பிறர் பயன்படவும் உதவியாக இருப்பர். தனக்குக் கீழே எப்பொழுதும் பத்துப் பேர் வேலை பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். கடவுள் பக்தி அதிகம் கொண்ட இவாகள் தன் மதம் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காகவும் ஆலயம் கட்டுவதற்காவும் முன் நிற்பர்.

பிறர் மெச்ச வேண்டும் என்பதற்காக உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசமாட்டார். ஆரம்ப வாழ்க்கை கஷ்டமானதாக இருந்தாலும் 21 வயதிற்கு மேல் ஓரளவு முன்னேற்றமும் பெறுவர். இவர்களுடைய பிறந்த தேதிக்குப் பொருந்தினாற் போல இயற்கையிலேயே பெயர் அமைந்து விட்டால் இளமையிலேலேயே நல்ல கல்வி பெற்றோரால் தேடப்பட்ட பெரும் சொத்து போன்றவை கிடைக்கும்.

**ஆர். ஐ. துரைமுருகர்**

சாஸ்த்திரம், விஞ்ஞானம் போன்றவற்றை ஆராய்ச்சி செய்யும் மனப்பான்மை இவர்களுக்கு உண்டு. உத்தியோகத்திலிருக்கும் சிலர் தனது பொறுப் புணர்ச்சியின் காரணமாகப் படிப்படியாக வாழ்க்கையில் உயர்ந்த இடத்தை அடைவர். பெயர் பொருததமானதாக அமைந்து விட்டால் நாட்டின் முக்கியமான அதிகாரிகளாகவும் நீதிபதியாகவும் பெரிய நோய்களை நிவர்த்தி செய்யும் சிறந்த டாக்டர்களாகவும் விளங்குவர். பிறந்த திகதிக்கு பொருத்தமானதாகப் பெயர் அமையாவிடில் சாதாரண வேலை பார்க்கும் அரசாங்க ஊழியராக இருப்பர். இவ்வாதிக்த்தில் பிறந்து தொழில் செய்கின்றவர்கள் பால் பண்ணையிலும் வாகனத்தாலும் ஒப்பந்தத்தாலும் ஏஜென்சியாலும் பொருளீட்டுகின்றனர்.

இவர்களுடைய முன்னேற்றம் நாளுக்கு நாள் விருத்தி அடையும். ஒரே நிதானமாக முன்னேறிக் கொண்டு செல்லும். இவர்கள் எவ்வளவு வருமானம் பெருகினாலு ஆடம்பரத்தை விரும்பமாட்டார்கள் இவர்களுடைய பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாகப் பெயர் அமையாவிடில் தேவையற்ற வேலைகளில் இறங்கித் தன்னைததானே கெடுத்து கொள்வர். இதனால் தொழில் செய்வோர் தான் செய்கின்ற வியாபார விலாசத்தைத் தனது பிறந்த தேதிக்குப் பொருத்தமான 3 எண் அல்லது 5 எண் வருகின்றமாதிரிப் பெயரை அமைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு அமைத்துக்கொண்டால் வியபாரம் பெருகும்.

### தொழில்

இந்த ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்குப் பால்ப்பண்ணை, பல சரக்கு, மொத்த வியாபாரம், ஏஜென்சீஸ்,கண்ட்ராக்ட் போன்றவைகளால் வருமானம் பெருகும். வியாபாரம் செய்பவர்கள் தனது பிறந்த தேதிக்குப் பொருத்தமான எண்களில வியாபார விலாசத்தையும் தனது பெயரையும் வைத்துக் கொள்வார்களானால் நிகரலாபத்தை அடைவர்.

### நோய்

குரு ஆதிக்கத்தில் பிறந்தவர்களாதலால். சிந்தனையால் வரக்கூடிய மன வியாதிகளும் பெயர் சரியாக அமையாவிட்டால் வரும் (பைல்த) மூலவியாதி, வாயுக்கோளாறு, இரத்த அழுத்தம் போன்றவைகளும் வரலாம். அவ்வாறு நோய் வந்தவர்கள் 45 எண் வருகின்ற மாதிரிப் பெயரை அமைத்துக் கொண்டால் நோய் நிவர்திதியாகும்.முன்னேற்றம் பெருகும்.

### பெயர்அமைக்கும் முறை

குருபலம்மிகுந்த இவ்களது வாழ்க்கை சிறந்து விளங்கவேண்டுமென்றால் 14,23,41,50,27,36,45,21, 39 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொண்டால் எல்லா வளமும் பெற்றுச் செழிப்பாக வாழ்வர்.

### பின் பற்ற வேண்டியவை

யோகமான எண் 3,9, யோகமான தேதிகள் 3, 12, 21,30,9,18,27, 5,14, 23, யோகமான மோதிரக்கல்- எமிதிஸ்டு,யோகமான நிறம்- றோஸ்,ஒறேஞ்சு, கத்தரிப்பூ நிறம், ஆகாத நிறம் பச்சை ஆகாத தேதிகள் 6,15,24;.

தொடரும் .....

## ரயில் சேவைகள் மட்டுப்படுத்துகை

(கொழும்பு)

கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு செல்லும் புகையிரதம் கந்தளாய் வரைக்கும், மட்டக்களப்புக்குச் செல்லும் புகையிரதம் வெலிக்கந்த வரையுமே செல்லும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் பாதையில் நேற்று முன்தினம் தீ மூட்டப்பட்ட காரணத்தால் இவ் விடங்களுக்குகான ரயில் சேவைகள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு அறை அறிவித்துள்ளது. (உ-8)

# கொழும்புத்துறையில் இயல்பு வாழ்வு

# ஏற்படுத்த தவறின் வெகுஜனப் போராட்டம்

## இருவார கால அவகாசம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை மக்களின் மீளக்குடியமர்வுதொடர்பான கோரிக்கைகளுக்கு இரு வார காலத்தினுள் தீர்க்கமான பதில் தராதவிடத்து, மக்களின் வெகுஜனப் போராட்டங்கள் மூலம் கொழும்புத்துறையில் நிலைகொண்டுள்ள படையினரின் செயற்பாடுகள் முகாம்களுக்குள் முடக்கப்படும் சூழ்நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், இந்து இளைஞர் மன்றம், கொழும்புத்துறை சனசமூக நிலையம் ஆகியன இணைந்து ஐ. நா. தூதரக அதிகாரியிடம் கையளித்த மகஜரில்இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கொழும்புத்துறைப் பகுதி மக்கள் நாட்டில் ஏற்பட்ட யுத்தநிலை காரணமாக 2000 ஆம் ஆண்டில் தமது சொந்த இருப்பிடங்களை விட்டுவெளியேறினார்கள். தற்போது நாட்டில் தோன்றியுள்ள அமைதியான சூழ்நிலையிலும் சொந்த வீடுகளில் அவர்கள் மீளக்குடியமர முடியாது வாழ்ந்து வருகின்றனர்.

பல்வேறு சொல்லொணாத துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் மக்கள் சுதந்திரமாக சொந்த வீடுகளில் வாழ்வதற்குரிய வசதிகளை ஏற்படுத்தித் தந்துதவுமாறு தங்களை அன்போடு வேண்டுகின்றோம்.

கொழும்புத்துறை இந்து இளைஞர்மன்றச் செயற்பாடுகளை உடன் ஆரம்பிக்க வசதியாக மன்றக் கட்டடத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை வேறு இடம் நகர்த்தி மன்றக் கட்டடத்தை பாவனைக்கு பெற்றுத் தர வேண்டும்.

அத்துடன் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்துக்குச் செல்லும் மாணவர்களின் நலன் கருதியும் விநாயகர் ஆலய செல்லும் அடியார்களின் நலன் கருதியும் இராணுவத்தினரால் மூடப்பட்டுள்ள விபுலானந்தன் வீதியைப் போக்குவரத்துக்காக உடனடியாகத் திறந்து விட வேண்டும்.

விபுலானந்த வீதி, சுவாமியார் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை இடம்நகர்த்தி அந்தவீடுகளை மக்களின் மீளக் குடியமர்விற்கு பெற்றுத்தர வேண்டும்.

கொழும்புத்துறை மகாவித்தியாலய மாணவர்களின் நலன்கருதியும் கொழும்புத்துறை மேற்கு ,சனசமூக நிலையத்தை மீள ஆரம்பிப்பதற்கு வசதியாகவும் கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயம் மேலும் அடியார்களின் நலன் கருதியும் அந்தப்பகுதிகளைச் சுற்றியுள்ள வீடுகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை வேறுஇடத்துககு மாற்றுமாறும் கொழும்புத்துறைப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள், மிதிவெடிகளை அகற்றத் துரித நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (உ)

### தொ நு. க மாணவர் ஒன்றியம்

## அம்பாறை சம்பவத்தை கண்டித்து அறிக்கை

(யாழ்ப்பாணம்)

அம்பாறை மற்றும் திருகோணமலையில் படையினரின் சூட்டுக்கு இலக்காகி பொதுமக்கள் பலியான சம்பவத்தைக் கண்டித்து யாழ். தொழில்நுட்பக்கல்லூரி மாணவர் ஒன்றியம் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது

அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

ஆயுதம் இன்றி நடமாடிய விடுதலைப் புலி உறுப்பினர்களைத் தாக்கியமை ஓர் புரிந்துணர்வு ஒப்பந்த மீறல்.

இப்படியான கொடூரச் செயல்கள் இனியும் நடைபெறாதிருப்பதை பிரதமரும் முப்படைகளும் உறுதிப் படுத்த வேண்டும்

இல்லையேல், மாணவர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலை ஏற்படும்.

வடக்கு-கிழக்கில் பொது இடங்களிலும் பொது மக்களின் வீடுகளிலும் நிலை கொண்டுள்ள படையினர் வெளியேற வேண்டும்.

தவறினால் மாணவர்களின் சாத்வீகப்போராட்டம்தொடரும் என்றுள்ளது. (உ)

## 9 மாத காலத்தில் 52 மிதிவெடிச் சம்பவங்கள்

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் கடந்த ஒன்பது மாதகாலங்களில் 52 மிதிவெடிச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக மிதிவெடி அகற்றும் கண்காணிப்பு பிரிவு அறிவித்துள்ளது.

குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் இடம்பெற்ற இச்சம்பவங்களின் போது இருவர் உயிரிழந்துள்ளதுடன், 27 பேர் அங்கவீனர்களாக ஆகியுள்ளனர்

இச்சம்பவங்களினால்

(2-ம் பக்கம் பார்க்க)

## அரசியல் அமைப்புச் சபை பிரதிநிதி இராஜினாமா

அரசியல் அமைப்புச் சபைக்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க வினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் அச்சபையில் இருந்து வெளியேறியுள்ளார்

அரசியலமைப்பு சபைக்கு நியமிக்கப்பட்டிருந்த ஜனாதிபதி சட்டத்தரணியான எச். எம்.பி. சில்வாவே தனது பதவி இராஜனாமாச் கடிதத்தை நேற்று அரசியலமைப்பு சபையிடம் கையளித்துள்ளதாக அச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பாக ஜனாதிபதி மற்றோர் உறுப்பினரை பிரேரிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-8)

### சமாதான நடவடிக்கைகளை

## இரு தரப்புகளும் தொடர வேண்டும்

### பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

அம்பாறை, திருகோணமலை ஆகியஇடங்களில் நடைபெற்ற சம்பவங்கள் சமாதான முயற்சிகளை பாதிக்காது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ.கொழும்பில்நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இத்தகைய துரதிஷ்டவசமான சம்பவங்களுக்கு முகம் கொடுத்து சமாதான முயற்சிகளை புதிய உத்வேகத்துடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு அரசுக்கு மாத்திரமின்றி தமிழீழ விடுதலைப் புலிகளையும் சார்ந்தது.

இவ்வாறான சம்பவங்களை பொருட்படுத்தாது,சமாதான நடவடிக்கைகளை இருதரப்பும் தொடர வேண்டும் எனவும் அவர் அங்கு மேலும் வலியுறுத்தியுள்ளார். (உ-8)

# முஸ்லிம்களின் கோரிக்கைகளுக்கு

# பொ. ஐ. மு. முழு ஒத்துழைப்பு

## ஊடகப் பேச்சாளர் உறுதிப்படுத்தினார்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் மக்களுக்காக தனியானநிர்வாக அலகு அல்லது தென்கிழக்கு மாகாணசபை ஒன்று அமைக்கப்படுமானால் அதற்கு பூரணஒத்துழைப்பை வழங்குவதாக பொதுஜனஐக்கியமுன்னணியின் ஊடகபபேச்சாளர் கலாநிதிசரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடபெற்றஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வறு தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதுகுறித்து ,2000 ஆம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி கொண்டுவநத அரசியல் சாசனத்தில் தெளிவாககுறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், அப்போது பிரதான எதிர்க்கட்சியாகஇருந்த ஐக்கிய தேசிய கட்சி இதற்கு எதிராகசெயற்பட்டது.இதன் காரணமாகவே தற்போது கிழக்குமாகாணத்தில் மோதல் சம்பவங்கள் ஏற்படுகின்றன.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் போது, நாட்டில் உளள சகலஇன மக்களினதும் உரிமைகள்மற்றும் பாதுகாப்பு என்பனவற்றை உறுதிப்படுத்துவதே எந்தவொரு அரசினதும் பிரதான கடமை ஆகும்.

ஐக்கிய தேசிய கட்சி இவ்விரு விடயங்களையும் பொறுத்தவரையில் எதையும் வெளிப்படுத்தாது மௌனம் சாதிக்கின்றது. இதனால் அரசியல் வட்டாரங்கள் மத்தியில் குழப்பமான சூழ்நிலையை தோற்றுவித்துள்ளது.

எனவே முஸ்லிம்மக்களுக்கு தனியான அலகு ஒன்றை அமைப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி 2000 ஆம் ஆண்டே அனுமதியளித்துள்ளது எனவும் அவர் ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளார் (உ-8)

### பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில்

## மருத்துவ சுகாதார வசதிகள் இல்லை

(தென்மராட்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் ஆயிரத்து 800 க்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 6 ஆயிரத்து 500 பேர் மீளச்குடியமர்ந்துள்ள போதிலும் இம் மக்களுக்கான மருத்துவ, சுகாதார வசதிகள் இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை.

முன்பு பளையில் இயங்கிய பளை அரசினர் வைத்திய சாலை இன்னமும் அங்கு ஆரம்பிக்கப்படவில்லை இவ் வைத்தியசாலையின் கட்டடங்கள் சேதமடைந்த நிலையில் இன்னமும் புனரமைக்கப்படாது இருப்பது இதற்குக் காரணமாகும்.

இங்கு அரசினர் வைத்திய சாலையை மீளவும் இயங்கச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் கூட நிரந்தர வைத்தியர் இன்மை தடையாகவுள்ளது.

இதேவேளை,இங்கு மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கான மருத்துவ சேவையை தமிழீழ விடுதலைப்புலிகளின் நடமாடும் மருத்துவசேவையினர் வாரத்தில் திங்கள், புதன்கிழமைகளில் வழங்கிவருகின்றனர். (உ-77)

# வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதம் 27 தினங்கள் இடம்பெறும்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் 2003 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தை பாராளுமன்றத்தில் 27 நாட்கள் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேரா தலைமையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற கட்சித் தலைவர்களின கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்றபதில்செயலாளர் நாயகம் பிரியாணி விஜயசேகர தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின்இந்தஇரண்டாவது வரவுசெலவுத்திட்டம் அடுத்த மாதம் 6 ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கப் படவுள்ளது தெரிந்ததே.

வரவு செலவுத் திட்டம் மீதானஇரண்டாவதுவாசிப்பு அடுத்த மாதம் 7ஆம் திகதி முதல் 14ஆம் திகதிவரை இடம் பெறவுள்ளது.

அதன் செயற்குழு விவாதம் அடுத்த மாதம் 15ஆம் திகதி முதல் டிச 10-ம் திகதி வரை நடைபெறும் எனவும் பதில் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இவ்வரவு செலவுத் திட்டம் தொடர்பான திட்ட அறிக்கை கடந்த வாரம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ)

### அம்பாறைச் சம்பவம்

## விசாரணைக் குழுவின் பணிகள் தாமதம்

(கொழும்பு)

அம்பாறை காஞ்சிரங்குடாப் பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற மனிதப் படுகொலைகள் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட குழு அதன் விசாரணைகளை அடுத்தவாரம் ஆரம்பிக்கவுள்ளது.

பிரதமரின் பணிப்பின் பேரில் நியமிக்கப்பட்ட இக் குழுவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் உறுப்பினர் ஒருவர் அங்கம் பெறும் வரை இப்பணிகள் தாமதம் அடையும் என உள்துறை அமைச்சின் செயலாளர் எம். என். யுனைட் தெரிவித்துள்ளார்.

இக்குழுவில் அங்கம் பெறவுள்ள தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர் பெயர் யுத்த நிறுத்த கண்காணிப்பு குழு ஊடாக நாளை திங்கட்கிழமை அறிவிக்கப்படவுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-8)

சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்துகொளல்
குறள்

வலம்புரி

# நோர்வே தலையிட வேண்டும்

அரசுக்கும்- விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சை முன்னெடுத்துச் செல்லும் நோர்வேயின் பணி மிகவும்சிக்கலானது- பொறுப்புடையது. சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்குப் புலிகளையும், அரசையும் கொண்டு வருவதுடன் நோர்வேயின் சமாதானப்பணி முடிவடையாது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கும், சமாதானப் பேச்சுவார்த்தையில் இருதரப்பும் இணங்கி ஏற்றுக் கொள்ளப்படுகின்ற தீர்வுத் திட்டத்திற்குமிடையிலான காலப்பகுதிவரை நோர்வேயின் சமாதானப் பணிமிகவும் நிதானமாக- முனைப்புடன் முன்னெடுக்கப்படவேண்டியதொன்றாகும்.

இருபது வருடகால யுத்தத்திற்கு குறிப்பிட்ட ஒருசில தினங்களில் முடிவு கட்டிவிடமுடியாதென்பது எவ்வளவு தூரம் உண்மையோ அதே போன்று மறுபுறத்தில் மிக நிதானமாக முன்னெடுக்கப்படுகின்ற சமாதான முயற்சிகள் ஒரு கணப் பொழுதில் சிதைவடைந்து போவதும் சாத்தியமானதே. இதனை ஆதாரப்படுத்துவதுபோல் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அம்பாறை காஞ்சிரம் குடாவிலும், திருமலையிலும் இடம்பெற்ற பொதுமக்களின் கொலைகள் அமைந்துள்ளன.

எனவே சமாதான முயற்சியில் முனைப்புடன் ஈடுபட்டிருக்கும் நோர்வே இது விடயத்தில் தலையிட்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். நோர்வேயின் சார்பில் கண்காணிப்புக்குழு நடவடிக்கை மேற்கொண்டாலும் மெல்லுவதும், விழுங்குவதும் அதன் இயல்பாகிவிட்டதால் உண்மை நிலையை அறியமுடிவதில்லையென்பதோடு கண்காணிப்புக் குழுவின் சமாளிப்பு பாரதூரமான விளைவையும் ஏற்படுத்திவிடும்.

எனவேஅம்பாறை-திருமலை ஆகிய இடங்களில இடம்பெற்ற படுகொலைகள் விடயத்தில் நோர்வே நேரடியாகத் தலையிட்டு உரிய விசாரணைகளும் விளக்கங்களும் நடத்தப்படுவதுடன் எச்சந்தர்ப்பத்திலும் யார் தவறு செய்தாலும் அதனைத் துணிந்து மக்களுக்கு வெளிப்படுத்தவும் நோர்வே தயங்கக்கூடாது.

# நான் உலகத்தை நியாயந் தீர்க்க வரவில்லை

# இரட்சிக்கவே வந்துள்ளேன் என்றார் இயேசு



## பரமபிதா காட்டிய பாதை

இயேசு எவ்வளவோ அற்புதங்களை யூதர்களுக்கு முன்பாகச் செய்திருந்த போதிலும் அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை. கர்த்தாவே, எங்கள் மூலமாகக் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன வசனம் நிறைவேறும்படி இப்படி நடந்தது. ஆகையால் அவர்கள் விசுவாசிக்கமாட்டாமல் போனார்கள். ஏனெனில்,ஏசாயா பின்னும்; அவர்கள் கண்களினால் காணாமலும், இருதயத்தினால் உணராமலும், குணப்படாமலும் இருக்கும்படிக்கும்,நான் அவர்களைஆரோக்கியமாக்காமல் இருக்கும்படிக்கும் அவர்களுடைய கண்களை அவர் குருடாக்கி,அவர்களின் இருதயத்தைக் கடினமாக்கினார் என்றான். ஏசாய அவருடைய மகிமையைக் கண்டு, அவரைக் குறித்துப் பேசுகிற போது இவைகளைச் சொன்னார்.'

### உலகத்தின் ஒளி

ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.அப்படியிருந்தும் ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்கப்படாதபடிக்கு, பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள்.அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும், மனுஷரால் வருகிற மகிமையை அதிகம் விரும்பினார்கள்.

அப்பொழுது இயேசு சத்தமிட்டு, என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் என்னிடத்தில் அல்ல, என்னை அனுப்பினவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறான். என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவரைக் காண்கிறான். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும், இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில்ஒளியாக வந்தேன். ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற் போனால்,அவனை நான் நியாயந் தீர்ப்பதில்லை; நான் உலகத்தை நியாயந் தீர்க்க வராமல், உலகத்தை இரட்சிக்க வந்தேன். என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை, நியாயம் தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந் தீர்க்கும். நான் சுயமாகப் பேசவில்லை: நான் பேச வேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார். அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்: ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார்.

தொகுப்பு : மதிவாணர்

### அன்பு வேண்டும்

நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். நான் உங்களில் அன்பாயிருந்தது போல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதனால் நீங்கள் என்னுடைய சிஷயர்களென்று எல்லோரும் அறிந்து கொளவார்கள் என்றார்.

''உங்கள் இதயம் கலங்காதிருப்பதாக: தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்தில் விசுவாசமாயிருங்கள். என் பிதாவினுடைய வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணிய பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்,நான்போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள்; வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்றார்.

### வழியும் சத்தியமும் ஜீவனும் நானே

தோமா உடனே அவரை நோக்கி ''ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம்'' என்றான்.அதற்குஇயேசு''நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். என்னை அறிந்தீர்களானால் என்பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இது முதல் நீங்கள் அவரை அறிந்தும், அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார்.

### பிதாவின் செயல்களே

பிலிப்பு அவரை நோக்கி ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்றான்.

அதற்கு இயேசு, 'பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உங்களுடன் கூட இருந்தும் நீ என்னை அறிய வில்லையா? என்னைக்கண்டவன் பிதாவைக்கண்டான். அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்கிறாய்? நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களிடம் சொல்கிற வசனங்களை என் சுயமாகச் சொல்ல வில்லை. என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார்; நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள். அப்படியில்லா விட்டாலும், என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்.

மெய்யாகவே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் என் பிதாவினிடத்துக்குப் போகிற படியால் என்னை விசுவாசிக்கிறவன், நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியை களையும் செய்வான். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப் படும் படியாக அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்.

## பொதுநூலகம் சொந்த இடத்தில் இயங்குகிறது

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரசபையின் பொது நூலகம் கடந்த வியாழன் முதல் அதன்பழைய இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இப்பொது நூலகம் கடந்த எட்டு மாதங்களாக மீசாலையில் தற்காலிகமாக இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

## தினசரி தியானம்

### உண்மையானகல்வி

ஆன்மீக விதையை இப்போதே விதைக்க வேண்டும். மணம் வீசும் மலரை இறைவனுக்குக் காணிக்கையாக்குங்கள். அது பெரிய காணிக்கையாகும்; நீங்கள் இளம் வயதினரானால், ஜெபம் செய்யுங்கள், கீர்த்தனாஞ்சலி செய்யுங்கள், தியானியுங்கள். மதத் தொடர்பான புத்தகங்களைப் படியுங்கள்,இப்போதே விதைத்தால்தான்,அது ஆழ்ந்து வேர்விட்டு வளர்ந்து, பூத்து இறவா நிலையாகிய கனியைத்தரும். ஆத்மாவை உணரச் செய்யும் கல்வியே உண்மையான கல்வியாகும். வாழ்க்கையில் நன்மைபயக்கும் இறுதியான பேரின்பத்தை அடைய உதவுவது இந்த உண்மையான கல்வி.

சுவாமி சிவானந்தர்

# பாராளுமன்ற உறுப்பினர்களின் பகிஷ்கரிப்பு தொடர்பாக ஸ்ரீ. மு. கா.

# அரசியல்பீடம் பலமணிநேரம் ஆராய்வு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அரசியல் பீடம் நேற்று முன் தினம இரவு தொடக்கம் அதிகாலை 2.30 மணிவரை கூடிநாடாளுமன்ற அமர்வுகளை கட்சியின உறுப்பினர்கள் 9 பேர் பகிஷ்கரித்து வருவது தொடர்பாக ஆராய்ந்துள்ளது.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் கட்சியின் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தை பகிஷ்கரிப்பது நியாயமானதாக இருந்தாலும்,

உறுப்பினர்களின் இவ்வாறான செயல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின தலைமைத்துவத்தையும், அரசாங்கத்தையும்இக் கட்டுக்குள்ளாக்குகின்றது என கட்சியின்தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அங்கு தெரிவித்தார்.

இதனால் தற்போதைய சுமுகமான சூழ்நிலையைகுழப்பும் செயல்களை நிறுததும் வகையில் பகிஷ்கரிப்பை கைவிட வேண்டும் என்றும் அமைச்சர் அங்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, அமைச்சரின் பரிந்துரையை கவனத்தில் கொண்டு, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிசாத் பதியுதீன் பகிஷ்கரிப்பைக் கைவிட முன்வந்துள்ளார் என கட்சிவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இடைக்கால நிர்வாக சபையில் முஸ்லிம்களின் பங்கு, மற்றும் வடக்கு- கிழக்கு முஸ்லிம்களுக்கு தனியான நிர்வாக அலகு ஆகிய விடயங்கள் தொடர்பாக பிரதமரும், கட்சியின் தலைவரான ரவூப் ஹக்கீமும் சரியான முடிவினை அறிவிக்க வேண்டுமெனக் கோரி கட்சியின் 9 உறுப்பினர்கள் கடந்த சில தினங்களாக பாராளுமன்றத்தைப் புறக்கணித்து வந்தமை குறிப்பிடத் தக்கது. (உ-8)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீராவியடி கிராம அபிவிருத்திச்சங்கத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டமும் புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவும் இன்று பி.ப 3.00 மணிக்கு யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் தலைவர் கை. சீவரட்ணம் தலைமையில்நடை பெறவுள்ளது. (உ-10)

## வாழ்த்தி வணங்குகின்றோம்



சைவத்தமிழுக்குப் பெரும் பணியாற்றி வையகம் பயனுற வாழும் காரைநகர் தந்த எங்கள் குரு

மூதறிஞர்

**சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக்குருக்கள்**

அவர்கள் இன்று நடைபெறும் யாழ். பல்கலைக் கழகத்தின் 22வது பட்டமளிப்பு விழாவில் கௌரவ கலாநிதிப்பட்டம் பெறுவதையிட்டு மனநிறைவும் மகிழ்ச்சியும் அடைவதோடு, அவரை வாழ்த்தி வணங்குகின்றோம்.

அவரின் பணி மென்மேலும் தொடர இறைவன் துணை நிற்பதாக.

**வியாவில் தேவஸ்தானம்**
**காரைநகர்**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (13.10.2002) ஞாயிற்றுக்கிழமை யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் 22வது பட்டமளிப்பு விழாவில் பொருளியல் சிறப்புக்கலைமாணி பட்டத்தைப் பெறுகின்ற எமது அன்புக்குரிய நண்பி

**செல்வி கயல்விழி முத்துக்குமார்**
B.A (HONS)

அவர்களைப் பாராட்டுவதுடன் மேலும் பல உயர்வுகளைப் பெற வாழ்துகின்றோம்.

நெடுந்தீவு — நெடுந்தீவு நண்பர்கள்

[6112]

## துப்பாக்கிப் பிரயோகம் செய்த மூவர் இனங்காணப்பட்டனர்

(திருகோணமலை)

திருகோணமலையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் நேரடியாக ஈடுபட்ட மூவர் இனங்காணப்பட்டனர்.

இனங்காணப்பட்டுள்ள ஜெனக, நாயக்க, சமன் ஆகிய மூவரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இந்த மூவரும் ஊர்காவல் படையைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றது. (ம)

## திருமலையில்...

வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை நேற்று திருகோணமலை நகரில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதனால் வழமை நிலை பாதிக்கப்பட்டிருந்தது.

திருகோணமலை நகரில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (த)

## யாழ் பல்கலை...

இதேவேளை நேற்று நடைபெற விருந்த பட்டமளிப்பு விழா ஹர்தால் காரணமாக ஒத்திவைக்கப் பட்டமை தெரிந்ததே.

இன்று முன்னர் அறிவிக்கப்பட்ட நேர அட்டவணை ஒழுங்குப் படியே பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் இடம்பெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## நெடுந்தீவில்...

கரையொதுங்கியுள்ளது.

அதில் காணப்பட்ட அடையாள அட்டையில் இராசேந்திரம் சிவலிங்கம் என்று பெயர் குறிப்பிடப் பட்டுள்ளதுடன், திருப்பூர்வீதி மயிலிட்டித்துறை என்ற முகவரியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் 30 வயது மதிக்கத்தக்க பிரஸ்தாப இளைஞரின் சடலம் நெடுந்தீவு பொலிசாரால் நெடுந் தீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது. (இ)

## மனநிறைவு பெறுகின்றோம்

தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் சேவாச்சிரமப் பணியில் கடந்த 33 ஆண்டுகளாக சற்றும் தன்னலம் கருதாமல் சேவையாற்றி வரும்

**திரு.அ.சோமசுந்தரம்பிள்ளை**

(B.A.F.C.A பட்டயக் கணக்காளர்)

அவர்கள் இன்று யாழ் பல்கலைக்கழகத்தின் 22வது பட்டமளிப்பு விழாவில் கௌரவ கலாநிதிப் பட்டம் பெறுவதையிட்டு யாம் மனநிறைவும் மகிழ்வும் அடைகின்றோம்.

தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் திருவருட் கடாட்சம் அவருக்கும், அவரது குடும்பத்தினர் யாவருக்கும் கிட்டும் வண்ணம் மனதாரப் பிரார்த்திக்கின்றோம்.

பருத்தித்துறை — செயலாளர், ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் இயங்கும் வர்த்தக நிறுவனத்திற்கு நல்ல அனுபவமும் திறமையும் மூன்று மொழிகளும் தெரிந்த வேலையாட்கள் தேவை

1, கணக்காளர்
2, களஞ்சியப் பொறுப்பாளர்
3, சிட்டை லிகிதர்

14.10.2002 திங்கள் பிற்பகல் 3மணிக்கு நேரில் வரவும்

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் றேடர்ஸ்,**
**171 கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

T .P .NO . 021-2223328

(குறிப்பு) கொழும்பில் உள்ள ஸ்தாபனத்தில் வேலை செய்பவர்களுக்கு உணவு தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படும்.

[6110]

தலை கொடுத்தேனும் கலை காப்போம்

## பண்ணாகம்
## அம்பாள் கலைமன்றம் நடாத்தும்
# வாணி விழா

காலம் : நாளை (14.10.2002) திங்கட்கிழமை மாலை 4.00 மணி.
இடம் : பண்ணாகம் நெல்லியான் காளி கோயில்
தலைவர் : திரு. சு.கலாரூபன் அவர்கள்.
பிரதமவிருந்தினர் : திரு. ஆ.கதிரமலைநாதன் (உதவித் திட்டமிடல்ப் பணிப்பாளர் பிரதேச செயலகம் கோப்பாய்)
சிறப்பு விருந்தினர் : காரை S.ஆதவன் (தமிழ் ஆசிரியர்)

## விசேட நிகழ்ச்சிகள்

### வழக்காடு மன்றம்

"குற்றவாளிக் கூண்டில் இன்றைய இளைஞர்களும் யுவதிகளும்"

**பிரதம நீதிபதிகள்**

1, திரு.அ. குமாரவேல் B.A(Hons) S.L.P.S. (பணிப்பாளர் யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிப்பிரிவு)
2, விகடகவி திரு.மு. திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற நீதிபதி)
3, திரு.ச. ஐங்கரன் B.A (Hons) (ஆசிரியர் உடுவில் மகளிர் கல்லூரி)

**குற்றம் சுமத்துவோர்**

செஞ்சொல்வேந்தர் இரா.செல்வவடிவேல்
திரு. S.கேசவன் B.A (ஆசிரியர் வட்டு இந்துக் கல்லூரி)
திரு. S.சந்தானபவான் B.A (Hons) (ஆசிரியர் சுப்றா (14) கல்வி நிறுவனம்)

**எதிர்த்து வாதிடுவோர்**

திரு. நாக தமிழிந்திரன் B.A. (Hons) (ஆசிரியர் யாழ்மத்திய கல்லூரி).
திரு. S.செல்வமனோகரன் (யாழ். பல்கலைக்கழகம்)
திரு. S. காந்தன் B.A (Hons)

### கவியரங்கம்

"வளமாக வாழ வழி சமைப்போம்"

தலைவர்: சிவச்சொல்வாரி நடேசன் சிவசண்முகமூர்த்தி (B.A.Dip in Ed.)
கவிஞர்கள்: து.பிரதீப், வி.செந்தூரன், செ.வதனி, சு.தவராணி, சி.தனலட்சுமி, ச.நித்தியானந்தன்

### நாடகம்

பண்ணாகம் அம்பாள் கலைமன்றத்தின் 37வது தயாரிப்பான

**புயலுக்குள் சிக்கிய பூக்கள்**

நன்றியுரை திரு. ப.உமாசுதன் (செயலாளர்)

அனைவரும் குறித்த நேரத்திற்கு வருகை தந்து ஆலய வழிபாட்டிலும் கலைநிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பண்ணாகம், சுழிபுரம் — நிர்வாகம்

விளம்பர அன்பளிப்பு

**குமரன் ஹாட்வெயர்ஸ்**
பிரதான வீதி, வழுக்கம்பரை.

**கலியுகன் தொலைத்தொடர்பகம்**
பிரதான வீதி, வழுக்கம்பரை.
T.P. 070-212410

**ஸ்ரீவரதராஜா பேக்கரி**
பிரதான வீதி, வழுக்கம்பரை.

இப் பத்திரிகை வலம்பு அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.10.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.